

ஆடை வடிவமைப்பு தொழில் நுட்ப கல்லூரி
சென்னை கிளைத் திறப்பு விழா
21-07-95
திறப்பு
தமிழக முதல்வர் சமூக நீதி
காத்த வீராங்கனை
டாக்டர் ஜெ.ஜெயலலிதா
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
தலைமை
திரு. ஜி. வெங்கட்சுவாமி அவர்கள்
மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர்
முன்னிலை
புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள்
மாண்புமிகு சமூக நலம் மற்றும் துணிநூல் துறை அமைச்சர்









# தமிழரசு




செல்வியர் பிரியா சகோதரிகள் - இன்னிசை

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !

**கலை நிகழ்ச்சிகளில் சில....**

டாக்டர் விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணன் - கிராமியப் பாடல்கள்



# இந்த இதழில்...


இலண்டன் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் திருவுருவச் சிலை
—மாண்புமிகு முதல்வர் உதவி .................. 2

தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரித் தொடக்க விழா
—மாண்புமிகு முதல்வர் உரை .................... 3

'நாட்டாமை' திரைப்பட வெற்றி விழாவில் ...
—மாண்புமிகு முதல்வர் உரை .................. 9

பர்கூர் தொகுதி மக்களுக்கு
—மாண்புமிகு முதல்வர் உதவி ................. 13

திருச்சி மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படும் ........................................ 15

21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்!
—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் ............................................... 17

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், மாநில அளவில் காயிதே மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா.................. 24

கலையாத கலை எங்கள் கலையே!
—டாக்டர் பத்மாசுப்பிரமணியம் ................ 27

நூல் நயம் ................................................. 33

இலக்கியத்தில் காதல்!
—புலவர் இளஞ்செழியன் .......................... 35

மாணவர் பக்கம் ........................................ 39

தமிழும் அறிவியலும்
—டாக்டர் வ.செ. குழந்தைசாமி .................. 41




### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

உரனென்றும் தோட்டியான் ஓரைந்தும்—
காப்பான்
வரனென்றும் வைப்பிற்கோர் வித்து (24)

அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறி களாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.


## தமிழரசு


திருவள்ளுவராண்டு - 2026

ஆடித் திங்கள் : 16

மலர்: 26 இதழ்: 3

1.8.1995

விலை ரூபாய்: 3



# இலண்டன் பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் திருவுருவச் சிலை!

## –மாண்புமிகு முதல்வர் உதவி

இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகின்ற கீழை நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கன் கல்வி மையம் (The School of Oriental and African Studies, University of London) தங்களுடைய வளாகத்தில் உலகப் பொதுமறையாம் திருக்குறளை யாத்த வள்ளுவப் பெருந் தகையின் திருவுருவச் சிலை ஒன்றினை நிறுவ வேண்டுமென்று கருதி, அதற்கான உதவிகளைப் புரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கை ஒன்றினை அனுப்பி வைத்திருந்தது.

'தமிழ் மறையாம்' திருக்குறளின் புகழ் உலகெங்கும் தழைத்தோங்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலும், மேலை நாடுகளிலும் தமிழ்க் குரல் ஒங்கி ஒலிக்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்தின் அடிப்படையிலும் அக்கோரிக்கையை உடனடியாக ஏற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவச் சிலையை அமைக்கப் பெற முதலில் 2.75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்கள். அதன்படி 5 அடி 3 அங்குலம் உயரமுள்ள வெண்கலத்திலான திருவள்ளுவரின் திருவுருவச் சிலை ஒன்று தற்போது செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருவுருவச் சிலையானது சுமார் 12 டன் எடையினைக் கொண்டு வெண் கலத்தினால் அமையப் பெற்றுள்ளது. இதற்கான பணிகள் முடிவடைந்து, இந்தத் திருவுருவச் சிலை இலண்டனுக்கு அனுப்பு வதற்காகத் தயாராக உள்ளதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இதனைச் சரக்கு விமானம் மூலம் அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக 1,00,000 ரூபாய் (ஒரு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இதனைக் கொண்டு திருவள்ளுவரின் திருவுருவச் சிலையானது உடனடியாக இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டனுக்கு அனுப்பப்பட்டு, அங்கு இலண்டன் பல்கலைக்கழகத்தில் விரைவில் நிறுவப்பட இருக்கின்றது.




# தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்

புதிய ஆடை சொல்லும் கட்டுரை

சென்னை எழும்பூரில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை வளாகத்தில் 21.7.95 அன்று தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரியின் தொடக்க விழா நடந்தது. தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி தொடக்க விழாவுக்கு மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு வெங்கட்சுவாமி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்டு தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி யைத் தொடங்கி வைத்தார். புதியதாக வடிவமைக்கப்பட்டுள்ள திருமணப் பட்டுச் சேலைகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இந்த விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

"சர்வதேச அளவில் புகழ்பெற்ற கலாச் சார மையமான சென்னையில் அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில் நுட்பத்துடன் நாகரீக ஆடைகள் தயாரிக்கும் வகையில் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்படுவது மிகவும் பொருத்தமானதும், பாராட்டத் தக்கதும் ஆகும். இதன்மூலம் நாகரீக ஆடைகள் தொழில் நுட்பத்தில் வளர்ந்து வரும் தேவை பூர்த்தியாகி வருகிறது என்பது



உறுதி. இந்தப் பெருமைக்குரிய நிலையத்தைத் திறந்து வைப்பதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்திருக்கும் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு வெங்கட்சுவாமிக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆடைகள் உலகில் இந்த மையம் சிறந்த நாகரிகக் கல்வியின் மையமாகத் திகழும் என்பது எனது கருத்தாகும்.

"உலகம் முழுவதும் நாகரிக சாம்ராஜ்யத்தில் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தியா அதில் விதி விலக்கு அல்ல. தீவிரமான கலாச்சார மாற்றங்கள் எல்லா இடங்களிலும் நிகழ்ந்து வருகின்றன. இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப, பொதுவாக மக்களிடமும் நாகரீக உணர்வு அதிகரித் துள்ளது.

"டெலிவிஷன் மூலம் காட்டப்படும் வண்ணமயமான கலாச்சாரக் காட்சிகள், மின்னும் நாகரிக அணிவகுப்புகள் ஆகியவை பொழுதுபோக்குக்காக மட்டுமல்ல. திறமை உள்ளவர்கள் நல்ல தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்கு உறுதியை அளிக்கும் ஒரு புதிய துறையும் ஆகும்.

"பழங்காலத்தில் இருந்த ஆடைகளை விட, தற்போது உள்ள ரசனைக்கு ஏற்றவாறும், தாங்கள் வேலை செய்யும் இடத்துக்குத் தக்கபடியும் உடைகளை அணியும் பழக்கம் ஆண், பெண்களிடையே ஏற்பட்டுள்ளது. இளைஞர்கள் பலர் வடிவமைப்புத் துறையை முழுநேரப் பணியாக ஏற்கத் தொடங்கி இருப்பதாலும், இதற்கு வர்த்தக வளம் இருப்பதாலும் இதுபோன்ற மையம் அமைப்பது மிகவும் அவசியம் ஆகும்.

"மேற்கத்தியக் கல்வி அடிப்படையில் வடிவமைப்புத் துறையில் நல்ல பயிற்சி அளிப்பதன் மூலம், தேசிய வடிவமைப்பு பயிற்சி மையம், தமிழக இளைஞர்களுக்கு அவசியத் தேவையான நவீன வடிவமைப்புத் தொழில்நுட்பத்தை வழங்கும் என்று நம்புகிறேன்.

"இந்திய ஜவுளித்துறையைப் பற்றிச் சில உண்மைகளை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்தியத் தொழில் கலைஞர்களின் நெசவுத் தொழிலாளர்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அதிக அளவில் சுரண்டப்பட்டு வருகிறார்கள். செயற்கை இழைக்கு வரவேற்பு இருப்பதால் பருத்தி ஜவுளித் தொழில் மிகவும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது.

"இந்திய நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் தரமான துணிகளை நெய்கிறார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அது உலகம் முழுவதிலும் உள்ள சந்தைகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இருந்தபோதிலும் நவீன தொழில்நுட்ப உதவியுடன் தயாராகும் துணி உற்பத்திக்கு

எதிராகவும், வளர்ச்சி அடைந்த வெளி நாடுகளில் குறைந்த விலையில் தயாரிக்கப் படும் செயற்கை இழைத் துணிகளுக்கு எதிராகவும் அவர்கள் நம்பிக்கையற்ற நிலையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

"வெளிநாடுகளில் பருத்தி ஆடைகள் அவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப செயற்கை இழைத் துணிகளைவிட உகந்தது என்றாலும், விலையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது பருத்தி ஆடைகள் வெளிநாட்டுச் சந்தைகளைப் பிடிக்க முடியவில்லை. இதனால் நெசவாளர்கள் வருமான இழப்பு அடைகிறார்கள். இதனால் நாம் மலிவான விலையில் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய துணிகளைத் தயாரிக்க வேண்டும். இதன்மூலம் கைத்தறி மற்றும் விசைத்தறித் துறைகள் உலகச் சந்தையில் போட்டி போட்டு வளர்ச்சி அடைய முடியும்.

"நம் நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய வடிவமைப்புடன் இந்திய நெசவாளர்களால் தயாரிக்கப்படும் பருத்தி மற்றும் பட்டுச் சேலைகள், இந்தியாவின் புகழை வெளிநாடுகளில் பரப்புவதில் பெரும்பங்கு வகிக்கும் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. மலைப் பகுதிகளில் வசிக்கும் நமது நெசவாளர்கள், வெளி நாட்டினரை வசீகரிக்கும் வகையில் அபூர்வமான வடிவமைப்புகளை உருவாக்கும் திறம் பெற்றுள்ளனர். அவர்களின் இத்தகைய திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள இந்தக் கல்லூரி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

"கைத்தறி மற்றும் ஜவுளித் துறையின் முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கை களை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் முன்பு வைக்க விரும்புகிறேன். சேமிப்பு பாதுகாப்புத் திட்டங்கள், சிக்கன நிதித் திட்டம் மற்றும் நல்வாழ்வுப் பணிமனைத் திட்டங்களை நெசவாளர் சமூகத்தினருக்கு அறிமுகம் செய்வதில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

"நமது நாட்டில் கைத்தறி நெசவாளர் குடும்பப் பென்ஷன் திட்டத்தை அமல் படுத்திய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் நெசவுத் தொழிலாளி மரணம் அடைந்து

# ஊனமுற்ற பெண்ணுக்கு அரசு வேலை

**பிளஸ் 2 தேர்வில் வரலாறு பாடத்தில் மாநிலத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்ற பாளையங்கோட்டையைச் சேர்ந்த செல்வி எல்.எஸ்.மீனாட்சி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் 22.6.1995 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பரிசு பெறும்போது, உடல் ஊனமுற்ற தனக்கு ஏதாவது ஒரு வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுக்கொண்டார். அதே விழா மேடையில் அவருக்கு உடனடியாக வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்து தரும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். அதன்படி, அவருக்கு, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.**

**கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிய நியமன ஆணையை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவரிடம் வழங்கினார்கள். செல்வி எல்.எஸ். மீனாட்சி, மாண்புமிகு தமிழக முதலமைச் சருக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.**

# காவலர்களுக்குப் பதவி உயர்வு

இவ்வாண்டு (1995) நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் காவல்துறை மானியத்தின் மீதான விவாதத்தின் இறுதியில், பதிலுரை ஆற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஏற்கெனவே 21,000 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, 1992-ஆம் ஆண்டே முதல்நிலைக் காவலர் களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட நிலையில், தற்போது ஆயுதக் காவல் படையிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவிலும் பணிபுரியும் காவலர்களுக்கு முதல்நிலைக் காவலர் நிலைக்குப் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று அறிவித் திருந்தார்கள். இப்பிரிவுகளில் பணிபுரியும் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு பெற Lance Naik மற்றும் Grade II Naik என்ற இரண்டு நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டும், இந்தக் காவலர்களுக்கு ஒரு பதவி உயர்வு மட்டும் அளித்தால் அவர்கள் முதல்நிலைக் காவலர்களுக்குச் சமமான Naik தகுதிக்குப் பதவி உயர்வு பெற முடியவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், இத்தகைய காவலர்களுக்கும் Naik பதவிக்கும் இடைப்பட்ட Lance Naik மற்றும் Grade-II Naik போன்ற பதவிகள் முற்றிலுமாக நீக்கப்பட்டு, அவர்களுக்கு முதல்நிலைக் காவலருக்குச் சமமான Naik தகுதிக்குப் பதவி உயர்வு வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன்மூலமாக ஆயுதப் படையிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவிலும் பணிபுரிகின்ற 1,700 காவலர்கள் பயன் அடைவார்கள்.

---

விட்டால் அவரது குடும்பத்தினருக்கு மாதம் 250 ரூபாய் வீதம் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்குப் பென்ஷன் தொகையாக வழங்கப்படுகிறது.

தமிழகக் கைத்தறி ஜவுளித் துறை கடந்த 1994-ஆம் ஆண்டிற்கான 3 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. பட்டு மற்றும் பருத்தி ஆடைகளில் சிறந்த வடிவமைப்பு களை உருவாக்கியதற்காகவும், ஒருங் கிணைந்த பயிற்சித் திட்டத்தின் மூலம் 25 ஆயிரம் பெண் நெசவாளர்கள் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்தியதற்காகவும் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் தமிழகக் கைத்தறி, ஜவுளித்துறை மிகப் பெரிய வளர்ச்சியை அடையும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பரம்பரையாக இந்தத் துறையில் ஈடுபட்டுவரும் நெசவாளர் களுக்குத் தங்களின் கலைப் பொருட்களுக்கு உலகம் முழுவதிலும் நல்ல விலை கிடைப்பதற்கான வழிவகைகளைக் காண, தமிழக அரசு தன்னை உறுதியாக அர்ப் பணித்துக் கொள்ளும்.

"தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி இங்கு தொடங்கப்பட்டதன் மூலம், பல்வேறு விதமான புதிய டிசைன்களில் துணிகள் மார்க்கெட்டில் விற்பனைக்கு வரும். இதனால், கைத்தறித் துணி வியாபாரம் அமோகமாக நடத்த வாய்ப்பு உள்ளது. மேலும், இங்கு தொடங்கப்பட்டுள்ள இந்தத் தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி சென்னை அருகே கேளம்பாக்கத்தில் முழு அளவில் செயல்பட ஏற்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தத் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்படும். தமிழக அரசு ஏற்கெனவே இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கி விட்டது. நமது மத்திய அமைச்சர் திரு வெங்கட்சாமியிடம், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டாம் என்று மேல் பதவியில் உள்ளவர்கள் கோரியுள்ளனர். அப்படி இருந்தும் அதைப் பொருட் படுத்தாமல் அவர் திட்டமிட்டபடி நிகழ்ச்சி யில் பங்குபெற்றுக் கவுரவித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

# தென்னிந்தியாவில் முதல் முறையாக

# "தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி"

நிகழ்ச்சித் தொகுப்பு:

**தெ**ன்னிந்தியாவில் முதன் முறையாகத் தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்பக் கல்லூரியின் தொடக்க விழா சென்னை எழும்பூரில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை வளாகத்தில் 21.7.95 அன்று சிறப்புற நடைபெற்றது.

இவ்விழாவில், மத்திய துணித்துறை அமைச்சகச் செயலரும், தேசிய ஆடை வடிவமைப்புக் கல்லூரியின் தலைவருமான திரு டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பின்பு, மாண்புமிகு சமூகநலம் - கைத்தறித் துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய துணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தார்.

பின்பு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தேசிய ஆடை வடிவமைப்புக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார். பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொத்தானை அழுத்திய வுடன், மேடைக்கு எதிரில் வட்ட வடிவ மேடையில் புகை மண்டலம் சூழ, புதிய வடிவமைப்புடன் கூடிய திருமணச் சேலை அணிந்த அலங்காரப் பொம்மையொன்று காட்சி அளித்தது. இக்காட்சி, காண்பவரைக் கவர்ந்தது.

மாண்புமிகு சமூகநலம் - கைத்தறித்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் பேசும்பொழுது, "இந்தத் தொழில் நுட்பக் கல்லூரியில் இருக்கும் மொத்த இடங்களில் 20 சதவிகிதம் மாநிலத்தில் உள்ள நெசவாளர்கள் பிள்ளைகளுக்கென ஒதுக்கப்படும் என்று கூறினார். பின்பு மாண்புமிகு மத்திய துணித்துறை அமைச்சர் திரு ஜி. வெங்கட்சாமி அவர்கள் பேசும் பொழுது "தமிழகம் கைத்தறித் துறையிலும் உள்ளாடைகள் உற்பத்தி செய்வதிலும் முன்னணியில் இருந்து வருகிறது. இந் நிலையில் இத்தகைய தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று சென்னையில் அமைவது மிகவும் பொருத்தமாகும்.

"இக்கல்லூரி அமைவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர்தான் காரணம் என்றும் கடந்த ஆண்டு (1994-95) ஆடைகள் ஏற்றுமதியின் மூலம் 44 கோடியே 30 இலட்சம் ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது" என்றும் கூறினார்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறந்த முறையில் துணிகளை வடிவமைத்த திரு நந்தகுமார், திரு ஞானமணி, திரு கதிர்வேல், திரு ஹரி, திரு சீனிவாசன், திரு துளசிராம், திருமதி பொன்னம்மாள், தவத்தம் சங்கரய்யா, மிரியாளு சீனிவாசலு போன்ற நெசவாளர் களுக்கு ரொக்கப் பரிசுகளும், சான்றிதழ் களும் வழங்கினார். பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு சமூகநலம், கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள், 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் நிவாரண நிதிக்கென வழங்கினார். மாண்புமிகு மத்திய துணித்துறை அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார். விழாவின் முடிவில் அரசு தலைமைச் செயலர் திரு என். அரிபாஸ்கர்

இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிதே முடிந்தது. இச்சிறப்பான விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் பலர் கலந்துகொண்டு சிறப் பித்தனர்.

விழா நடைபெற்ற இடத்தின் முகப்பு கோ-ஆப்டெக்ஸ் சின்னமான வண்ணத்துப் பூச்சியின் வடிவம் கொண்டதாக அழகுற அமைக்கப்பட்டு இருந்தது. முன்னதாக மாண்புமிகு முதல்வர் அவர்களை கோ-ஆப்டெக்ஸ் சின்னமான வண்ணத்துப் பூச்சி போன்று வேடமணிந்த பள்ளி சிறுமிகள் வரவேற்று மகிழ்ந்தனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
அ. மதிமாறன்

# மொரிஷியஸ் நாட்டில் தமிழ்நாட்டுக் கலை நிகழ்ச்சிகள்

அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகைபுரிந்த மொரிஷியஸ் நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், மொரிஷியஸ் நாட்டிற்குத் தமிழகக் கலைக்குழு ஒன்றினை அனுப்பிவைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அவரது வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கலைக்குழு ஒன்றினை அனுப்ப ஆணையிட்டார்.

25 பேர் அங்கம் வகிக்கும் அக்குழுவில், தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு கிருத்துதாசு காந்தி, நாதசுரக் கலைஞர்கள், மதுரை சகோதரர்கள் எம்.பி.என். சேதுராமன் மற்றும் என்.பி.என். பொன்னுசாமி, நடனம், டாக்டர் செல்வி பத்மா சுப்பிரமணியன், வாய்ப்பாட்டு பிரியா சகோதரிகள், புல்லாங்குழல் சிக்கல் சகோதரிகள் முதலியோர் இடம் பெற்றிருந்தனர். 20.7.1995 அன்று புறப்பட்டு சென்று 5 நாட்கள் கலை நிழக்ச்சிகளை மொரிஷியஸ் நாட்டில் நடத்திவிட்டு 26.7.1995 அன்று அந்தக் கலைக்குழு சென்னை திரும்பியது.

மொரிஷியஸில் உள்ள அருள்மிகு சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் கோவிலில் மொரிஷியஸ் நாட்டுப் பிரதம மந்திரி திரு அனிருத் ஜகநாத் அவர்கள் தலைமையில் அந்நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன், பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு ச்சூனி, இந்தியத் தூதர் திரு சியாம் சரண் ஆகியோர் பங்குபெற்ற விழா ஒன்றில் தமிழ்நாட்டுக் கலைக் குழுவின் பரதநாட்டியம், நாதசுரம், புல்லாங்குழல், கர்நாடக வாய்ப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் கிராண்ட் பே (Grand Baie) என்ற இடத்தில் நடந்த ஆடிக்கிருத்திகைக் காவடி விழாவிலும், மொரிஷியஸில் உள்ள மகாத்மா காந்தி மையத்திலும், இந்திரா காந்தி மையத்திலும், தமிழ் லீக் நடத்தும் அரங்கத்திலும் கலை நிழக்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

தமிழ்நாட்டிலிருந்து சிறந்த கலைஞர்கள் கொண்ட கலைக் குழு ஒன்றை மொரிஷியஸ் நாட்டிற்கு அனுப்பி இரு நாட்டவர் இடையேயும் கலாச்சார இணைப்பை ஏற்படுத்தியதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மொரிஷியஸ் நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித் துள்ளார்.




# "திரைப்படம் என்பது மாபெரும் மக்கள் தொடர்புச் சாதனம்!"

## மாண்புமிகு முதலமைச்சர் உரை

அண்மைக் காலத்தில் நான் பார்த்த தமிழ்ப் படங்களில், 'நாட்டாமை' திரைப்படம்தான் எனக்கு உண்மையான மன நிறைவையும், அக மகிழ்ச்சியையும் அளித்தது. ஏதோ இந்தப் படத்தின் வெற்றி விழாவில் நான் கலந்துகொள்வதால், இதை நான் சொல்லவில்லை. உண்மையாகச் சொல்கிறேன்.

பொதுவாக, எனக்குப் பழைய படங்கள்தான் மிகவும் பிடிக்கும். Late Forties, குறிப்பாக Fifties and Sixties Period-இல் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் என்றால், நான் மிகவும் விரும்பிப் பார்ப்பேன். காரணம் அந்தக் காலங்களில் தயாராகி, வெளிவந்த படங்களில், சண்டைக் காட்சிகள் இருந்தாலும், வயிற்றைக் கலக்கும் பயங்கரமான கற்பனைக்கு எட்டாத வன்முறைச் சம்பவங்கள் இருக்காது. அதேபோல ஆபாசமும், விரசமும் இருக்காது. சமுதாயத்தில், மரபு வழியே, நாம் மதிக்கின்ற நல்ல பண்புகள் – அதாவது Moral Values என்பார்களே, அந்த அடிப்படையில்தான் கதை அமைந்திருக்கும். அதுமட்டுமின்றி, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும், ஒட்டுமொத்தமாக உட்கார்ந்து ரசிக்கின்ற Wholesome family entertainment தருகின்ற படங்களாகவும் அவை இருந்ததை எவரும் மறுக்க முடியாது.

### வன்முறைக் காட்சிகள்

ஆனால், சமீப காலமாகத் தமிழ்த் திரைப்பட உலகின் தனித் தன்மைகள் மறைந்து, இளைய தலைமுறையினரின் மனங்களைக் கெடுக்கும் வண்ணம், மிகப் பயங்கரமான, அருவருப்பான வன்முறைக் காட்சிகள் அதிகரித்துவிட்டன. ரசிகர்களின் எதிர்பார்ப்பு என்கின்ற போர்வையில்,

மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகள் பெருகி வருகின்றன. இத்தகைய மிதமிஞ்சிய வன் முறைக் காட்சிகளைத்தான், இந்தக் காலத்து ரசிகர்கள் விரும்புகிறார்கள் என்ற ஒரு தவறான கருத்து பரப்பப்படுகிறது. ஒரு வேளை வன்முறைக் காட்சிகள் நிறைந்த படங்களைத் தயாரித்து வழங்கும் சமுதாய உணர்வு அற்ற சில வியாபாரிகள், தங்களது செய்கைகளை நியாயப்படுத்துவதற்காக இது போன்ற பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்களோ என்று நான் சந்தேகப் படுவது உண்டு.

**ரசிகர்கள் தவறா ?**

வன்முறைக் காட்சிகளும், விரசமான



காட்சிகளும் இல்லாமலே, ரசிகர்களின் மனங்களைக் கவர்ந்து, வசூலில் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்த 'நாட்டாமை' திரைப்படத்தை நான் பார்த்த போதுதான். எனது சந்தேகம் நிரூபணமானது. ஒருபுறம் மித மிஞ்சிய வன்முறைக் காட்சிகள் நிறைந்த சில படங்கள் நன்றாக ஓடி, வசூலில் சாதனை படைத்துள்ளன. உண்மைதான். ஆனால், அதே காலகட்டத்தில், 'நாட்டாமை' போன்ற ஒரு நல்ல படமும், ஒரு Clean family entertainerம் மக்கள் மத்தியில் பேராதரவைப் பெற்று, வசூலிலும் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது என்பதிலிருந்து, "தவறு ரசிகர்களிடம் இல்லை" என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

கருத்தாழமிக்க கதையுடன், நியாயமான கற்பனையுடன் இணைந்த நிகழ்ச்சிகளைக் கொண்ட திரைப்படமாக இருந்தால், தமிழக ரசிகப் பெருமக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள எப்போதும் தயாராக இருக்கிறார்கள் என்ற உண்மையையும், திரைப்பட வெற்றிக்கு வன்முறைக் காட்சிகள்தான் அடிப்படை என்ற எண்ணம் அர்த்தமற்றது என்பதையும், 'நாட்டாமை' படத்தின் மாபெரும் வெற்றி நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

**பழைய படங்களில்**

எனது அரசியல் ஆசான் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர், தமிழ்த் திரைப்பட உலகில் கொடி கட்டிப் பறந்த காலத்தில், அதாவது 1950-ஆம் ஆண்டுகளிலும், 1960-ஆம் ஆண்டுகளிலும், வெளிவந்த படங்கள், குடும்பத்துடனும் உற்றார் உறவினர் களுடனும் ஒன்றாகச் சேர்ந்து ரசித்துப் பார்க்கும் வண்ணம் அமைந்திருந்தன. அவை Clean and wholesome family entertainmentஐ வழங்கின. நாடோடி மன்னன், எங்க வீட்டுப் பிள்ளை, அன்பே வா, ஆயிரத்தில் ஒருவன், பாசமலர், பாகப் பிரிவினை, பாலும் பழமும் என்று எண்ணற்ற திரைப்படங்களை அடுக்க வரிசையிலே, என்னால் கூற முடியும். அந்தக்

காலகட்டத்தில் மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்று வெற்றி அடைந்த படங்களில் சண்டைக் காட்சிகள் இருக்கும். ஆனால் மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகள் அறவே இருக்காது. அந்தப் படங்களில் ஆபாசமும் இருக்காது. விரசமும் இருக்காது.

எனவே, ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பார்க்க முடிந்தது.

ஆனால், இன்று வரும் சண்டைக் காட்சிகள் எல்லாம் மனதைச் சிதைக்கின்றன. பயங்கரமான வன்முறைக் காட்சிகளாக அமைக்கப்படுகின்றன. அத்துடன் விரசமான காட்சிகளும், சம்பவங்களும் தமிழ்த் திரைப்படங்களை family entertainers என்ற பெருமையை இழக்கச் செய்துவிட்டன. இப்போதெல்லாம் தங்களது குழந்தைகளை நல்ல பிள்ளைகளாக வளர்க்க வேண்டும் என்ற அக்கறை உள்ள பெற்றோர்கள் முதலில் இந்தத் திரைப்படங்களைத் தாங்கள் சென்று பார்த்துவிட்டு, தங்களது குழந்தைகளும் இப்படங்களைப் பார்ப்பதற்குத் தகுதியுடையவைதானா என்று பார்த்து முடிவு செய்த பின்னர்தான், குழந்தைகளை அழைத்துச் சென்று படம் பார்க்கின்ற ஒரு சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது என்பதை, எவரும் மறுக்க முடியாது. இத்தகைய ஒரு சூழ்நிலை தொடர்ந்தால், இந்தச் சமுதாயத்தின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு இது உகந்ததாக இருக்குமா என்ற அச்சம் என் மனதில் ஏற்பட்டது.

**மனம் விட்டு ரசிக்க முடியவில்லை!**

அண்மைக் காலத்தில் வெளிவந்த சில படங்களை, என்னால் மனம் விட்டு ரசிக்க முடியவில்லை. ஏன்? சில படங்களில் வன்முறைக் காட்சிகளைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. மனிதாபிமானம் அற்ற வன்முறைச் சம்பவங்கள் காட்சிக்குக் காட்சி வருவதோடு, கத்தியை எடுத்துக் குத்துவதும், வாளை எடுத்து வெட்டுவதும், ரத்தம் ஆறாக ஓடுவதும் பலவிதமான துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு சரமாரியாகச் சுடுவதும், வெடிகுண்டுகளை எடுத்து வீசுவதும், மோசமான முறையிலும், கேவலமான முறையிலும் மனிதர்களைச் சித்திரிப்பதும், ஈவிரக்கம் இல்லாத முறையில், சித்திரவதை செய்வதைக் காட்டுவதும், தமிழ்த் திரைப் படங்களில் சாதாரணமாகிவிட்டன.

தமிழ்ச் சமுதாயத்தின் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும், ஊறு விளைவிக்கும் இத்தகைய படங்கள் எப்படி வெற்றி பெறுகின்றன என்று நான் ஆராய்ந்து பார்த்தேன். இத்தகைய வெற்றிக்கு யார் காரணம்? நிச்சயமாகத் தாய்மார்கள் அல்ல. அறிவு முதிர்ச்சி பெற்றுள்ள ஆண் மக்களும் அல்ல. வயது முதிர்ந்த ஆண் மக்களும் அல்ல. இளைய தலைமுறையினர்-குறிப்பாக ஆண் பிள்ளைகள்தான் இத்தகைய படங்களை, மிக அதிகமான அளவில் கண்டுகளிக்கிறார்கள் என்பதும், அவர்கள்தான் அத்தகைய படங்களை வெற்றிபெறச் செய்கிறார்கள் என்பதும் தெளிவாகிறது.

## சுற்றுலா

**1994-ஆம் ஆண்டில் 19 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ளனர். அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது இரண்டு சதவிகிதம் அதிகம். 1995 ஜனவரி முதல் மே மாதம் வரை எட்டு இலட்சத்து 44 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். 1994-ஆம் ஆண்டில் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் இது 3.6 சதவிகிதம் அதிகம். 1995-ன் முதல் ஐந்து மாதங்களில் ரூ.3,232 கோடி அன்னியச் செலாவணி கிடைத்தது. அதற்கு முந்தைய ஆண்டைவிட இது 10.2 சதவிகிதம் அதிகம்.**










**ஆதிதிராவிடர் மேம்பாட்டு மேல்நிலைக் கண்காணிப்புக் குழுவின் நான்காவது கூட்டம், சென்னைத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன், தலைமைச் செயலர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். (20.7.95)**

**மக்கள் தொடர்புச் சாதனம்**

சினிமா என்பது ஒரு சக்திவாய்ந்த மக்கள் மனதில் ஆழமாக ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஒரு மாபெரும் மக்கள் தொடர்புச் சாதனம் என்பதை எவரும் மறுக்க முடியாது. சமுதாயத்தில் நிலவி வந்த, சில கொடுமைகளை மாற்றி அமைத்து, நல்ல மாறுதல்களுக்கு வழிகாட்டிய, திரைப் படங்களைத் தயாரித்து வழங்கியதும், இதே திரைப்பட உலகம்தான் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. இசையிலும், பாடல்களிலும் மக்கள் மனதை மாற்றி, திருப்பி நல்வழிப்படுத்திய பெருமையும், நம் திரைப்படங்களுக்கு உண்டு. நல்ல கருத்துக் களை மக்களுக்கு வழங்கி, மாபெரும் சமுதாய மாற்றங்களுக்கு வழி வகுத்த பெருமை படைத்த சாதனம் திரைப்படம். வெறும் பணம் சம்பாதிக்கும் சாதனமாகப் பயன்படுத்தி, எத்தகைய மோசமான வன்முறைக் காட்சிகளாக இருந்தாலும், அவற்றைக் காட்டி அதன்மூலம் லாபம் சம்பாதிக்கச் சிலர் முயலுவது, விரும்பத்தக்க முன்னேற்றம் அல்ல. இதில் நான் இவ்வளவு கவலை கொள்வதற்கு இன்னொரு முக் கியமான காரணமும் உண்டு. திரைப்படங் களைக் காண்போர்களின் எண்ணிக்கையும், காணுகின்ற வாய்ப்புகளும் இன்றைய சூழ்நிலையில் அதிகரித்துள்ளது என்பதே, எனது கவலைக்குக் காரணம் ஆகும்.

**(சென்னை கலைவாணர் அரங்கத்தில், 27.7.95-இல் நடைபெற்ற 'நாட்டாமை' திரைப்பட விழாவில் பேசியதிலிருந்து)**



# பர்கூர் தொகுதி மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்தத் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களையவேண்டும் என்பதற்காக, பர்கூர் நகரில் தொகுதி அலுவலகம் ஒன்றைத் தொடங்கி மனுக் களைப் பெற்று வருகிறார்கள்.

இந்த அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தனது நேரடிப் பார்வையில் பரிசீலனை செய்து, அரசுத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்களைப் பல்வேறு அரசுத் துறையின் பிரிவுகளுக்கு மேல்நடவடிக்கைக்கு அனுப்பிவைத்து, அரசின் சார்பிலான உதவிகளைப் பெற்றுத் தருகிறார்கள்.

எஞ்சியுள்ள மனுக்களில், அரசு உதவிகள் கிடைக்க இயலாத வண்ணம் உள்ள மனுக்களைத் தேர்ந்தெடுத்து, அந்த மனுதாரர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சொந்த நிதியிலிருந்து, பொருட்களை



# மக்கள் சக்தியே மகாசக்தி!



தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழிவந்த மக்கள் அரசு. இதுவரை ஆட்சி செய்தவர்களைப் போல, பழங்கதை பேசாமல் மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட, ஆழ்ந்து சிந்தித்து, ஆய்ந்து அறிந்து, திட்டங்களைத் தீட்டுகின்ற அரசாகத் திகழ்கிறது எங்கள் அரசு. அந்தத் திட்டங்கள்தான், இன்று செயல்வடிவம் பெற்று, சாதனைகளாக மலர்ந்துள்ளன.

இந்தத் திட்டங்கள் அனைத்துமே, மக்களின் நல்வாழ்வினைத், தங்களது நியாயமான மைய நோக்கமாகக் கொண்டவை. பொதுமக்களின் எல்லா வாழ்வு நிலைகளையும், அம்சங்களையும், குறைபாடுகளையும் சரி செய்து, அவர்களை மேம்படுத்துவதற்காக, எங்கள் அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளும், அடைந்த சாதனைகளும், எண்ணில் அடங்கா என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

மகளிர் உட்பட வேலைவாய்ப்பற்றோருக்கு, சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தோம். எழுத்தறிவில்லாதவர்களுக்கு, அறிவொளி இயக்கத்தின் மூலம் அறிவூட்டினோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், தன்னிறைவு அடையச் செய்தோம். நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம், நகர்ப்புறங்கள் அடிப்படை வசதிகளைப் பெறச் செய்தோம். தற்போது, தொழில் வளர்ச்சி காண்பதன் மூலம், பொருளாதார முன்னேற்றத்தின் முதற் கட்டத்தைத் தாண்டி உள்ளோம்.

மக்கள் சக்தி என்ன என்பது, புரட்சித் தலைவருக்கும் எனக்கும், மற்றவர்களைவிட மிக நன்றாகவே தெரியும். அந்த மகாசக்தி தான் எனக்குப் பேராதரவாய், பக்க பலமாய், ஊக்கப் பொருளாய் இருக்கின்றது, என்பதை எண்ணும்போது, பெருமிதமும், பூரிப்பும் அடைகின்றேன்.

—புரட்சித்தலைவியின் முழக்கம்
தொகுதி-2-லிருந்து

---


வாங்கவும், நிதியாக வழங்கியும் வருகின்றார்கள். இதுவரை 1,088 நபர்களுக்கு இத்தகைய உதவிகள் பொருட்களாகவும், நிதி உதவிகளாகவும் வழங்கப்பட்டுள்ளன.

24.7.95 அன்று, மேலும் 163 நபர்களை, தனது இல்லத்திற்கு வரவழைத்து, தனது சொந்தச் செலவிலிருந்து பொது நிதி உதவி கோரிய 72 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய 26 நபர்களுக்கும், காய்கறிக்கடை வைக்க, நிதி உதவி கோரிய 2 நபர்களுக்கும், ஆடுகள் வாங்க நிதி உதவிகோரிய 12 நபர்களுக்கும், மளிகைக் கடை வைக்க நிதி உதவி கோரிய 3 நபர்களுக்கும், நிதி உதவியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்.

மேலும், திருமணம் செய்வதற்காக 7 நபர்களுக்கும், மருத்துவச் சிகிச்சைக்காக 6 நபர்களுக்கும் நிதி உதவியினை வழங்கினார்.

இவை மட்டுமின்றி, கறவை மாடு கோரிய 9 நபர்களுக்குக் கன்றுடன் கூடிய உயர்ந்த ரகக் கறவை மாடுகள் தலா ஒவ்வொன்றும், மாட்டு வண்டி கோரிய 8 நபர்களுக்கு உயர்ந்த ரகக் காளை மாடுகளுடன் கூடிய இரட்டை மாட்டு டயர் வண்டி தலா ஒவ்வொன்றும், தையல் இயந்திரம் கோரிய 3 நபர்களுக்குத் தலா ஒரு தையல் இயந்திரமும், சலவைப் பெட்டி கோரிய 2 நபர்களுக்குத் தலா ஒரு சலவைப் பெட்டியும் வழங்கினார்.

மேலும், கட்பீஸ் கடை வைக்க 2 நபர்களுக்கும், டீ கடை வைக்க 2 நபர்களுக்கும், நடமாடும் இஸ்திரிக் கடை வைக்க ஒரு நபருக்கும், சிற்றுண்டிக் கடை வைக்க ஒரு நபருக்கும், பேக்கரிக் கடை வைக்க 3 நபர்களுக்கும், நிதி உதவியினை வழங்கி, 4 நபர்களுக்குச் சைக்கிள் கடை வைக்க தலா 6 சைக்கிள்களும், கடை வைக்கத் தேவையான இதர உபகரணங்களையும் வழங்கினார்.




# திருச்சி மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படும்!

## 1. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்
## 2. கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டம்
## 3. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்

திருச்சி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால், நிர்வாக வசதிக்காகப் பிரிப்பது என்று தமிழக அரசு ஏற்கெனவே திட்டமிட்டு இருந்தது.

தமிழக அமைச்சரவைக் கூட்டம் மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் தலைமையில் 25.7.95 அன்று நடந்தது. திருச்சி



**பெரும்பிடுகு முத்தரையர்**

மாவட்டத்தை 3ஆகப் பிரிப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அமைச்சரவைக் கூட்ட முடிவு பற்றி பின்னர் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

"25.7.95 அன்று மாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை நிர்வாக நலன் கருதி பிரித்து, திருச்சிப்பள்ளி, கரூர், பெரம்பலூர் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு, மூன்று மாவட்டங்களாக அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்குத் திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் என்றும், கரூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டம் என்றும், பெரம்பலூரைத் தலைமையிட மாகக் கொண்ட மாவட்டத் திற்குப் பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் என்றும் பெயர் சூட்டுவது எனவும் அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டது".





**தீரன் சின்னமலை**

திருச்சி மாவட்டம் 3 ஆகப் பிரிக்கப்படுவதால், தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 25 ஆக உயருகிறது.

☆ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

நீங்கள் பிறரிடம் அன்பு செலுத்தினால், கடவுள் உங்களிடம் அன்பு செலுத்துவார். குடும்பத்துடன் நீங்கள் பிரார்த்தனை செய்தால், கடவுள் உங்களை அடைவார்.

—அன்னை தெரசா

# 21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்!

## மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

## திரு எஸ். கண்ணப்பன் அவர்கள்

'காவிரி பாயும் கன்னித் தமிழ்நாடு கலைகளுக்கெல்லாம் தாய்வீடு' என்ற உணர்வோடு நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணி யிலும், நெஞ்சை அள்ளுகின்ற விதத்திலே எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை, சிறப்பாக நடத்தி வெற்றிக்கொடி பிடித் திருக்கிற வித்தகத் தலைவியாம், ஓராயிரம் ஆண்டுகள் தவமிருந்து எங்களுக்குக் கிடைத்த - வாராது வந்த மாமணி, விழியசைவில் சாதனைகள், விரலசைவில் சரித் திரங்கள், எந்தச் செயலையும் துணிச்சலோடு எதிர்க்கின்ற ஆற்றல், வானத்தின் வள்ளல் தன்மை, பூமியின் பொறுமை, எரிமலையின் போர்க்குணம், இத்தனையும் ஒருங்கே அமையப் பெற்று, சங்கத் தமிழுக்குப் புகழ் சேர்க்கின்ற சிங்க நிகர் தலைவி யின், தங்கத் தலைவியின் திருப்பாதம் தொட்டு வணங்கி, என் தலைமை உரையைத் தொடங்குகின்றேன்.

கலை என்றால் என்ன என்ப தற்குப் பைந்தமிழ்க் கவிஞன் பாரதிதாசன் சொல்கின்றான்:

"கலை என்றால் கல்வி அல்ல; ஒருவருக்குள்ள வெள்ளறிவின் தனி ஆற்றலால் பிறக்கும் வியத் தகுமோர் பொதுச் செல்வம்" என்றான் அந்தப் பாரதிதாசன். ஆக, கலை என்பது வெறும் கல்வி மாத்திரம் அல்ல, அந்த வியத்தகு ஆற்றலை வெளிப் படுத்துகின்றபோது தான் அந்தக் கல்வி கற்றது மாத்திரம் அல்ல, அதைத் தெரிந்து கொண்டது மாத்திரம் அல்ல, அதை வெளிப்படுத்துகின்ற உணர் விலேதான் அவனுக்கு மரி யாதை வருகிறது அந்தக் கலைக்கு மரியாதை வருகின்றது என்ற உணர்வோடுதான் பாரதி தாசன் மெலிவாக, கனிவாகச் சொன்னான் - 'கலை என்றால் கல்வி அல்ல; ஒருவருக்குள்ள வெள்ளறிவின் தனி ஆற்றலால் பிறக்கும் வியத்தகுமோர் பொதுச் செல்வம்' என்று.

ஒரு மனிதன் தன்னுடைய உள்ளத்தை வயமாக்கி, நிரம்பி, அத்தோடு நின்று விடாமல், வெளிப்படுத்தும் ஆற்றலே கலை. அதை வெளிப்படுத்து கின்ற ஆற்றல் வேண்டுமென்று சொல்கிறான்.

பாரதிதாசன், அந்தக் கலை களையெல்லாம் அன்னைத் தமிழ் மொழியிலே காணு கின்றான்.

தமிழிலே ஆடல், பாடல், இசை என அந்தக் கலைகளை யெல்லாம் காணுகின்றான் நம்முடைய பாரதிதாசன். ஆக, தமிழிலே அத்தனையும் இருக் கிறது என்ற உணர்வோடு இன் றைக்குக் கலைக்கு ஒரு வடிவம்

கொடுத்த ஒரு மொழி தமிழ் மொழி என்பதை அன்றைக்கே நம்முடைய பாரதிதாசன் உணர்த்தி இருக்கிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாரதிதாசன் அதற்குப் பின்னாலே சொல்கிறான்:

"அந்நாளில் இலக்கியத்தை ஆய்தல்
ஒன்றே
அரும்புலமை என்னும்
மடமையகற்றி
இந்நாளில் பழந்தமிழில் புதுமை
இயற்றி"

-என்கிறான்.

பழங்காலக் கலைகளை அவன் மறுக்கவில்லை. பழங்காலக் கலைகள் இன்றைக்கும் போற்றுகின்ற வண்ணம் இருக்கின்றன. கட்டடக் கலையானாலும் சரி, இசைக் கலையானாலும் சரி, ஓவியக் கலையானாலும் சரி, நாட்டியக் கலையானாலும் சரி, இயற்கை என்ற அழகுக் கலையானாலும் சரி, திரைப்படக் கலையானாலும் சரி, இதிலே சொல்ல முடியாத பல கலைகள் இருக்கின்றன; காவியக் கலை இருக்கிறது - இதிலே ஓவியக் கலை பற்றிச் சொல்லவில்லை. ஏனென்றால், அரசியலேகூட ஒரு கலைதான். அதையும்கூட நாம் விவாதித்து இருக்கலாம்.

ஆனால் அத்தனைப் பொருள்களையும் விவாதிக்க முடியாது என்ற காரணத்தினால்தான் ஒரு குறிப்பிட்ட கலைகளை மாத்திரம் இங்கு நாம் விவாதிக்கிறோம். அரசியல் கலை என்றாலே, ஒரு நாட்டை நடத்துவதே ஒரு கலை. ஒரு கட்சியை நடத்துவதே ஒரு கலை. ஒரு நாட்டையும், கட்சியையும் ஆட்சியையும் காப்பாற்றி நடத்துகின்ற ஒரு பான்மையே ஒரு கலைதான். இன்றைக்கு அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர் புரட்சித் தலைவி.

அரசியல் கலையைக்கூட இன்றைக்கு ஒரு விவாதத்திலே வைத்து இருக்கலாம். அதைப் பேசுவதற்கு ஒரு அறிஞரைப் போட்டிருக்கலாம். ஆக, இன்றைக்கு நிறைய இருக்கிறது. அதிலே குறிப்பிட்டவைகளை மாத்திரம் இன்றைக்கு எடுத்து வைத்திருக்கலாம். ஆகவே, கலைகளைப் பற்றிச் சொல்கின்ற பொழுது, அதைத்தான் நான் சொன்னதைப்போல, அன்றைக்கு இருந்த கலையுணர்வு என்ன? இன்றைக்கு இருக்கின்ற கலை உணர்வு என்ன? அன்றைக்கு எப்படிக் கலையைப் பழந்தமிழர் காப்பாற்றினர்? இன்றைக்கு அந்தப் பழந்தமிழ்க் கலைகளுக்கும் புது வடிவம் கொடுத்து, புதிய தொழில் நுட்ப ரீதியாக இன்றைக்குப் புரட்சித் தலைவி என்னென்ன செயல்பாடுகளைக் கொண்டிருக்கிறார் என்பதை ஒன்றிரண்டை மாத்திரம் இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**★ ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன், நமது மனத்தை உருவாக்க உதவுகின்றது.**
**- பேரறிஞர் அண்ணா**

பாரதிதாசன் சொல்லியதைப் போல, பாரதியாரும் சொல்கிறார். கலைகளைப் பற்றிச் சொல்கின்றபொழுது,

"மந்திரம் கற்போம் - வினைத்
தந்திரம் கற்போம்
வானை அளப்போம் - கடல்
மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல்
கண்டு தெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம்
கற்போம்!
காவியம் செய்வோம் - நல்ல
காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் - கொல்ல
ருலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் - நல்ல
ஊசிகள் செய்வோம்"

ஆக, இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு வருகின்றபோது, பாரதியாரும் கலைகளைப் பற்றிச் சொல்கிறார். ஒவ்வொரு கலையைப் பற்றியும் இயற்கைக்கு உதாரணம், ஓவியத்திற்கு உதாரணம். ஆகவே, தமிழ்ப் பாட்டிலே, பாரதியின் வடிவிலே பல கலைகளை நாம் இன்றைக்குப் பார்க்க முடிகிறது.

மேலும் பாரதி கூறுகின்றான்:

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள்
கூறும்
மெத்த வளருது மேற்கே"

என்று சொன்னான். மேற்கே என்று சொன்னான். புதிய சிந்தனைகள் இன்றைக்கு மேலை நாடுகளிலே வளர்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னான். இன்றைக்கு அந்தப் புதிய சிந்தனைகளை இங்கே உருவாக்கிக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவி; மேலை நாட்டிலே புதிய புதிய கட்டடங்களை நாம் பார்க்கிறோம். ஆனால், மேலை நாட்டிலே ஒன்றரை ஆண்டுகளிலே கட்டி முடிக்கக் கூடிய நேரு விளையாட்டு அரங்கம்,

> **கலையையும், இலக்கியத்தையும் நான் பெரிதும் மதிக்கிறேன் விரும்புகிறேன். ஏனென்றால், கோடிக்கணக்கான மக்களுடன் பேசும் சக்தி கொண்டவை அவை.**
> **—காந்தியடிகள்**

இன்றைக்கு 6 மாதக் காலத்திலே, அண்மையிலே சென்னையிலே கட்டி முடிக்கப்பட்டது. ஆகவே, தமிழ்நாடு மேலை நாடுகளுக்குக் குறைந்தது இல்லை என்பதை நிரூபிக்கின்ற விதத்திலே அன்றைக்குப் பாரதி கண்ட கனவை நனவாக்குகின்ற புதுமைப் பெண்ணாக, அவன் என்ன கலை உணர்வு இந்த நாட்டிலே வர வேண்டும் என்று நினைத்தானோ, அவன் நோக்கம் என்னவென்று அன்றைக்கு நினைத்தானோ, அவன் சிந்தனை என்னவென்று தந்திருக்கின்ற, சிந்தனைத் தலைவிதான் நம்முடைய புரட்சித்தலைவி என்பதை நீங்கள் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாட்டியக் கலையைப் பற்றிச் சொல்லுகிறோம். இன்றைக்கு நாட்டியத்திற்கு ஏது மகிமை என்று நினைக்கலாம். இன்றைக்கு நாட்டியக் கலைக்கு புதிய வடிவம் தந்து, நாட்டியாஞ்சலி நடத்தியவரே புரட்சித் தலைவி அவர்கள்தான். மாமல்லபுரத்திலே விழா எடுத்து ஒருமாத காலம் நாட்டியாஞ்சலி நடத்தி, இன்றைக்கும் அந்தக் கலை பட்டுப் போகாமல், கெட்டுப் போகாமல் பாதுகாக்கின்ற ஒரே தலைவி எங்கள் புரட்சித் தலைவி. இருபத்தோறாம் நூற்றாண்டிலும் அந்த நாட்டியக் கலை பெருமை மங்காதிருக்கும் வகையில் அதை அவர் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்.

ஆகவேதான், பரதநாட்டியம் இன்றைக்குப் புகழ் பெற்றிருக்கிறது. ஏனென்றால் அவரே நாட்டியத்திலே தலை சிறந்து விளங்கியவர் என்பதை மறுக்க முடியாது. ஆகவே, இன்றைக்கு அத்துணையும் அவரிடத்திலே இருக்கிறது. நாட்டியக் கலை அவரிடத்திலே இருக்கிறது. திரைப்படக் கலை அவரிடத்திலே இருக்கிறது. இயற்கை அழகை ரசிக்கும் அழகு அவரிடத்திலே இருக்கிறது. நம் தங்கத் தலைவி, நெஞ்சிலே நிறைந்து இருக்கின்ற உத்தமத் தலைவி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நினைவாலயத்தை உருவாக்கிய கட்டடக் கலை அவரிடத்திலே இருக்கிறது. அந்தக் கலையார்வம் அவரிடத்திலே இருக்கிறது. காவியம் அவரிடத்திலே இருக்கிறது. ஓவியம் அவரிடத்திலே இருக்கிறது.

ஆகவே, இன்றைக்கு இருபத்தொன்றாம் நூற்றாண்டின் புதிய சிற்பியாக, இருபத்தொன்றாம் நூற்றாண்டிற்கு இன்றைக்கு நம்மை அழைத்துச் செல்கின்ற ஒரு ஒப்பற்ற தலைவியாக, சிந்தனைத் தலைவியாக, கலைத் திறன் பெற்ற தலைவியாக, புரட்சித் தலைவி இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இசைக் கலையைப் பற்றிச் சொல்கின்றபொழுது, நான் கூடப் பாடலிலே கேட்டிருக்கிறேன். 'இசையால் வசமாகா இதயம் எது' என்று. ஒரு காலத்திலே கோகுலத்திலே பசுக்களைக் கண்ணன் தன் குழலூதி வயப்படுத்தினான். கம்பால் அடித்து அல்ல. அன்றைக்குக் குழலூதி பசுக்களைக் கண்ணன் வயப்படுத்தினான் என்று சொன்னால், அந்த இசைக்கு அன்றைக்கு மிருகங்களும் ஆட்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது.

யாரையும் மயக்குகின்ற ஆற்றல், யாரையும் கவருகின்ற அந்தத் திறன், இசைக்கு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடிகிறது. பண்டைய காலத்தை எடுத்துப் பார்த்தால் ஒரு குழந்தை இருக்கிறது- அந்தக் குழந்தைக்குத் தூக்கம் வரவில்லை என்றால், தாயினுடைய தாலாட்டு 'ஆராரோ ஆரிரரோ' என்னும் அந்த இனிய இசை, அந்தக் குழந்தைகளுக்கு உறக்கம் வர வைக்கிறது. ஆகவே, அடித்துப் படுக்க வைக்க முடியாது. அதட்டிப் படுக்க வைக்க முடியாது. ஆனால், அதைத் தாலாட்டிப் படுக்க வைக்க முடியும். இசையால் அதை வழிப்படுத்த முடியும். அறிவு வளர்ச்சி பெறாத குழந்தைகளுக்குக்கூட இசைஞானம் இருக்கிறது என்று சொன்னால், இசைக்கலை கீழே இருந்து மேலே வரை அத்தனைப் பேரையும் வயப்படுத்துகின்ற

ஆற்றலைப் பெற்று இருக்கிறது என்பதை நாம் காண முடிகிறது.

பண்டைய காலத்திலே இருந்த, இசை முழக்கிய வாத்தியங்கள் பற்றியும் சொல்ல வேண்டும். இன்றைக்குக்கூட புதுப்புது வாத்தியங்கள் புதிய சிந்தனைகள். ஆனால் அன்றைக்கு வீணை, குரல், துத்தம், கைக்கிளை, இளி, விளரி, தாரம் என்று பல்வேறு வாத்தியங்கள், இன்றைக்குக்கூட அந்த வாத்தியங்களுக்கு மகிமை இருக்கிறது. இந்த வாத்தியங்களையெல்லாம் ஒன்றுசேர நாம் எப்போது பார்க்க முடிகிறது என்று சொன்னால், எங்கள் தங்கத் தலைவி, புரட்சித்தலைவி, ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் செல்லுகின்றபோது, மொத்தமாக அந்த இசை வாத்தியங்களை நாங்கள் பார்க்க முடிகிறது.

இதுபோன்ற பல பழம் பெரும் இசை வாத்தியங்களெல்லாம் இன்னும் தமிழகத்திலே இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட இங்கே நடந்த 30,35 நிகழ்ச்சிகளிலும் இது போன்ற பண்டைக்காலத்து இசை நாகரீகம் உள்ள வாத்தியங்களையெல்லாம் நாங்கள் முழங்கி இருக்கிறோம். இன்றைக்கும் பழங்காலத்து இசை வாத்தியங்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம். ஆகவே, இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

திருநாவுக்கரசர் கூட 'ஈசன் எந்தை இணையடி நிழல் மாசில்லா வீணையொலி போன்றது' என்றார். மாசற்ற

---

**★போற்ற வேண்டியவை உண்மை - உழைப்பு - உயர்வு. பின்பற்ற வேண்டியவை கனிவு - பணிவு - துணிவு. பேணப்பட வேண்டியவை கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு.**

**- பேரறிஞர் அண்ணா**

---

வீணையொலி என்பது ஈசனுடைய இணையற்ற அடிக்குச் சமானம் என்று சொன்னார். ஆக, அன்றைக்கு —

இறைவன் கூட, அந்த வீணையின் ஒலிக்குக் கட்டுப் படுகிறான் என்பதை நாம் தெளிவாகப் பார்க்கின்றோம்.

கட்டடக் கலைக்கு மிகவும் பெயர் பெற்ற இடம் தஞ்சைத் தரணி. சோழ மன்னர் காலத்தில் கட்டப்பட்டிருக்கிற ராஜராஜன் கோயில், அதைப் போலப் பல்லவர் காலத்தில் கட்டபட்டிருக்கின்ற கட்டடக் கலைகள், நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடக் கலைகள், மொகலாய மன்னர் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடக் கலைகள், இன்றைக்கு அதையும் விஞ்சி, பல்வேறு கட்டடக் கலைகள் பரிணாம வளர்ச்சியாக வந்தாலும், இந்தியாவிற்கே முன்னுதாரணமாகத் தமிழ்நாட்டிலே கட்டடக் கலையை இன்றைக்குப் புரட்சித் தலைவி வளர்த்து வருகிறார். ஆகவே, தமிழகம் இன்றைக்குப் புரட்சித்தலைவியினுடைய தலைமையிலே கட்டடக் கலைக்கு முன்னுதாரணமாக இருக்கிறது என்பதற்கு நான் பல உதாரணங்களை இங்கே எடுத்து வைத்தேன்.

எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது சிற்பக் கலை, கல்லிலும், உலோகத்திலும், மெழுகிலும் கூட, மரத்திலும் கூட, உருவங்களை அமைக்கின்ற பாங்குதான் சிற்பக் கலை. சிற்பக் கலை என்பது இயல்பாக வந்து விடுவது அல்ல. ஒரு சிற்பி என்பவன் சிறந்த ஞானியாக இருக்கிறான். மேலெழுந்தவாரியாக அவன் ஒரு சிற்பத்தைச் செதுக்கிவிட முடியாது. அவன் உள்ளத்திலே இருக்கின்ற உணர்வுகளையும் அந்த உருவத்தையும் மனதிலே வைத்துக்கொண்டு அந்தச் சிலையைச் செதுக்குகின்றான். ஐம்புலன்களையும் அடக்கி ஒருசேர ஆட்படுத்தி, அவன் உணர்வுகளை அந்தச் சிலையிலே வடிக்கின்றபோதுதான், அந்தச் சிற்பம் புதிய பரிணாமம் பெறுகின்றது.

ஆகவே, இப்படிச் சிற்பக் கலை செய்வதற்கு நமது கணபதி ஸ்தபதி போன்றவர்களெல்லாம் இன்றைக்கு இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கும் அந்தச் சிற்பக் கலை மறைந்துவிடவில்லை. எத்தனையோ குகைக் கோயில்கள், சித்தன்னவாசல் போன்ற இடங்கள் உள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே நீங்கள் பார்க்கலாம். காஞ்சி கைலாசநாதர் கோயிலிலே நீங்கள் பார்க்கலாம். ராமேஸ்வரத்திலே நீங்கள் பார்க்கலாம். இன்றைக்கும் அந்தச் சிற்பக் கலை பாதுகாக்கப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஓவியக் கலையைப் பற்றி நாம் சொல்ல வேண்டும். ஓவியம் தீட்டுவது என்பது மிகச் சிறந்த ஒரு கலை. அதை மிக

எளிதாக நாம் யாரும் செய்து விட முடியாது. ரவிவர்மா இருந்தார். நினைத்த மாத்திரத்திலே ஓவியங்களை வரைவார். ஒரு சிறந்த ஓவியம் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு விலை போகின்றது. நாம் அதனுடைய மதிப்பைப் பார்த்தோம் என்று சொன்னால், மிகக் குறைந்த தாகத்தான் இருக்கும். என்ன ஒரு ஐம்பது ரூபாய் இருக்குமா - நூறு ரூபாய் என்றுகூட நினைக்கலாம். ஆனால், பல இலட்சம் ரூபாய்களைக் கொடுத்து வாங்குகின்ற அளவிற்கு ஓவியக் கலையை இன்றைக்கு மேலை நாட்டவர் போற்றுகின்றனர்.

அந்த ஓவியக் கலை நம்மிடத்திலே பல இடங்களில் இருக்கின்றது. அதையெல்லாம் நாம் பேணிக் காக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி எடுத்த முடிவு தான் இன்றைக்குப் பெரிய கோயிலிலே இருக்கும் ஓவியத்தைப் பாதுகாப்பதற்காகப் பல இலட்ச ரூபாய்களைச் செலவழித்து மிக அழகாக இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்.

ஆகவே, இருபத்தோறாம் நூற்றாண்டிலும் புரட்சித் தலைவி ஓவியக் கலையையும் இன்றைக்குக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்.

அடுத்து- திரைப்படக் கலை. இன்றைக்குத் திரைப்படத்தைப் பொறுத்த மட்டிலே, மறைந்தும் நெஞ்சிலே மறையாமல் இருக்கின்ற மாணிக்கத் தலைவர் - புரட்சித்தலைவர், தான் இருக்கின்ற வரையிலே மக்கள் நெஞ்சிலே புகழ்க்கொடி ஏற்றிய உத்தமத் தலைவன். அவர் ஆளுகின்ற வரை அவர்தான் முதலமைச்சர். அவர் அன்றைக்குத் திரைப்படத் துறையிலே இருந்த வரையில் அவர்தான் முடிசூடா மன்னன். அன்றைக்குத் திரைப்படக் கலைக்கு அவர் புதிய பரிணாம வளர்ச்சி தந்தார்.

திரைப்படக் கலை என்பது ஒரு சாதாரணக் கலை அல்ல. மற்ற கலைகளைப் பார்ப்பதற்கு நாம் சென்று பார்க்க வேண்டும். ஆனால், ஒரே நேரத்திலே கோடிக்காணக்கான மக்களின் உள்ளத்திலே அந்தக் கலை உணர்வை ஏற்படுத்துகின்ற ஒரு இயல்பான அமைப்பு திரைப்படம். ஒரே நேரத்திலே கோடிக்கணக்கான பேர்கள் இன்றைக்கு அதைப் பார்க்க முடிகிறது. புரட்சித் தலைவருடைய படங்கள் படங்களல்ல. அவை பாடங்கள். ஆகவேதான், இன்றைக்கும் மக்கள் மத்தியிலே, அந்தத் திரைப்படக் கலையின் வடிவாக அந்தத் தலைவனைக் கண்ட மக்கள் அவரை இன்றைக்கும் நெஞ்சிலே நினைவுறுத்திப் போற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தலைவனோடு எத்தனையோ பேர் நடித்து இருக்கலாம். ஆனால், அத்தனைப் பேரும் ஒளிவீசும் நவரத்தினமாக உயர்ந்தது கிடையாது. ஆனால், ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி ஒருவர்தான் அந்தத் தலைவனுடைய அரசியல் வாரிசாக, கலைத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி, இன்றைக்கு வாரிசாக மிகச் சிறந்து விளங்குகிறார். புரட்சித் தலைவி ஏற்காத வேடமே கிடையாது.

★ **நல்ல எண்ணங்களைத் தூவினால்தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.**

**- பேரறிஞர் அண்ணா**

அவர் எந்த வேடத்தை எடுத்தாலும் வெற்றிக்கொடி நாட்டியவர். அவரும் நம்முடைய புரட்சித்தலைவரும் இணைந்து நடித்தால் அந்தப் படங்கள் தோற்றதே கிடையாது. ஆகவே, அவர்களை வைத்துப் படம் எடுத்தவர்கள் எல்லாம் அன்றைக்குப் பணம் சம்பாதித்தார்கள். ஆகவே, புரட்சித் தலைவர் காலத்திலும் சரி, புரட்சித்தலைவி காலத்திலும் சரி, இன்றைக்குத் திரைப்படக் கலை அன்றைக்கு உருப்பெற்றிருந்ததற்கு முழு வடிவம் தந்தார்.

எங்கே திரைப்படம் முடிந்து விடுமோ – வீடியோக்கள் வந்து விட்டனவே என்று எண்ணிய நேரத்திலும்கூட, ஏறத்தாழ 21 கோடி ரூபாய் செலவழித்து திரைப்பட நகரை ஆசியாவிலேயே மிகப் பெரிய திரைப்பட நகரமாக உருவாக்கிய பெருமை புரட்சித்தலைவிக்கு உண்டு. ஆக, திரைப்படக் கலையையும் இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்.

'ஜெயலலிதா திரைப்பட நகர்' என்று நம்முடைய தங்கத் தலைவியின் பெயராலே இன்றைக்கு ஒரு திரைப்பட நகரை, யாரும் செய்ய முடியாத

வண்ணம், உருவாக்கி, திரைப் படக் கலையைக் காத்தவர் புரட்சித் தலைவி. திரைப்படத் துறையிலே பிரச்சினை ஏற்படுகின்றபொழுது தமிழனுக்கு மட்டுமல்ல, தெலங்குப்பட உலகுக்குப் பிரச்சினை வந்தால் கூட, அதையும் தீர்த்து வைக்கின்ற ஆற்றல் நம்முடைய புரட்சித் தலைவிக்கு இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு மத, இன, உணர்வு, மொழி ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டுத் திரைப்படத் துறையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர் நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அதைப்போலத்தான் நாடகக் கலை. இன்றைக்கு நாடகம் பல்வேறு இடங்களிலே நடந்தாலும் யாரும் பார்க்க மாட்டார்கள். அந்தக் காலத்திலே பவளக்கொடி, வள்ளித் திருமணம், நந்தனார், அரிச்சந்திரா நாடகம், பிரகலாதன் போன்ற நாடகங்கள் நடிக்கும்போது பார்த்திருக்கிறோம். இன்றைக்கும் அந்த நாடகக் கலையைப் போற்றுகின்ற விதத்திலேதான் நம்முடைய மனோகர் அவர்கள் 'திருநாவுக்கரசர்' என்ற நாடகத்தைத் தயாரிப்பதற்கு இயல், இசை, நாடக மன்றத்திற்கு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களைத் தலைவராகவும், மனோகர் அவர்களைச் செயலாளராகவும் போட்டு அதற்குப் பல இலட்சம் ரூபாய்களைச் செலவழித்து அந்தக் கலையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் காவல் தெய்வமாம் புரட்சித் தலைவி அவர்கள். இருபத்தோறாம் நூற்றாண்டிலும் சரி, இருபதாம் நூற்றாண்டிலும் சரி, அத்தனைக் கலைகளுக்கும் இன்றைக்கு வடிவமும் பாதுகாப்பும் வழங்கும் தலைவியாகப் புரட்சித் தலைவி இருக்கிறார்.

**★ பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு, நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள்.**

**- பேரறிஞர் அண்ணா**

கலையை வளர்க்கின்ற ஆற்றல், தமிழை வளர்க்கின்ற அறிவு, தமிழை வளர்க்க வேண்டுமென்ற உணர்வு, எண்ணம் இல்லாதவர்கள் இன்றைக்குப் புரட்சித் தலைவியைப் புறம்பேசிப் பயனில்லை.

உலகத் தமிழ் மாநாடு நடத்திய பெருமை நம் நெஞ்சிலே நிறைந்து இருக்கின்ற உத்தமத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு. மதுரையிலே நடத்திக் காட்டினார். எந்தப் பெயராலே இயக்கம் அமைத்து இருக்கிறோமோ எந்த அண்ணனுடைய திருவுருவப்படத்தைக் கொடியிலே பதித்து இருக்கிறோமோ, அந்த அண்ணன் நடத்திக் காட்டினார். அதற்குப் பின்னாலே, அந்தத் தலைவனுக்குப் பின்னாலே, நம்முடைய தங்கத் தலைவி இன்றைக்குத் தஞ்சையிலே நடத்திக் கொண்டிருக்கிறார்.

மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த என் மறவேந்தர் -

பூனைகளல்ல, அவர் வழி வந்தோர் புலிநிகர் தமிழ் மாந்தர் -

ஆணை, என் தமிழ் ஆட்சியை நிறுவ அல்லல் வரின் ஏற்பேன் -

ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டிற்கு உவப்புடன் நான் சேர்ப்பேன் -

என்று தங்கத் தமிழ்மொழிக்காக இன்றைக்குப் போராடுகின்ற தங்கத் தலைவி, சிங்கநிகர்த் தலைவி, புரட்சித் தலைவி அடி வணங்கி அமைகிறேன்.

**(–'21ஆம் நூற்றாண்டும் கலைகளும்' என்ற தலைப்பில் '8ஆம் உலகத் தமிழ் மாநாடு' - 4ஆம் நாள் கருத்தரங்கில் பேசியதிலிருந்து)**

**★ அனுபவம் என்பது தேர்வு இல்லாத பாடம். அனுபவம் என்பது பாடம் கற்கும் பொழுது வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் கல்வி முறையாகும்.**

**- பேரறிஞர் அண்ணா**



# விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு காவல் துறையில் 10 சதவிகித இட ஒதுக்கீடு: மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

கடந்த 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்ற படித்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் வண்ணம், அவர்கள் காவல்துறைப் பணிகளுக்குப் போட்டியிடும்போது அவர்களுக்காக 10 சதவிகிதம் சில குறிப்பிட்ட பணிகளில் ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார்.


மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டிருந்த இந்த அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையம் தற்போது இதற்காக விதிமுறைகளை உருவாக்கி, அவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்திருந்தது.

அப்பரிந்துரையை முழுமையாக ஏற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர், காவல் துறையில் இனி வரும் காலங்களில் நடத்தப்படுகின்ற நேரடித் தேர்வுகளில் 10 சதவிகிதம் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்ற இளைய தலைமுறையினருக்கு ஒதுக்கீடு செய்யப் படும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்.

இவ்வாணை, இந்த ஆண்டு முதல் அமலுக்கு வரும். இதன்படி இரண்டாம் நிலை ஆண் காவலர், இரண்டாம் நிலை பெண் காவலர், ஆண், பெண் சப் இன்ஸ்பெக்டர், துணை போலீஸ் சூப்பிரண்டுப் பிரிவு ஒன்று ஆகிய பணி இடங்களுக்கு இந்த 10 சதவிகித இடஒதுக்கீடு விதிமுறை பொருந்தும்.

இந்த ஒதுக்கீட்டின்கீழ், போட்டியிடும் போட்டியாளர்கள் பல்கலைக்கழக அளவிலேனும், மாநில முதுநிலை - இளநிலை அளவிலேனும் அல்லது சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் நமது நாட்டைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். இந்த ஒதுக்கீடானது பொதுவாக அனைத்துப் பிரிவுகளுக்கும் செய்யப்பட்டுள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டின்கீழே வரும்.

இதற்கான விரிவான விதிமுறைகளை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையம் இரண்டாம் நிலைக் காவலர் முதற்கொண்டு சப் இன்ஸ்பெக்டர் பதவி வரையிலும், காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்கான விரிவான விதிமுறைகளைத் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் வெளியிடும்.



# வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், மாநில அளவில்- காயிதேமில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா


கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் விழா, வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மாநில அளவிலான விழாவாக 30.7.95 அன்று, வாணியம்பாடியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அறிஞர் பெருமக்களுக்கும், தலைவர்களுக்கும், வாழ்கின்றபோதே வரலாறு படைத்தவர்களுக்கும் மிகச் சிறந்த முறையில் அரசு சார்பாகப் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையிலும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு மிகச் சிறப்பாகப் பிறந்தநாள் விழாவினை மாவட்டந்தோறும் நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், முதலாவதாகச் சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மிகவும் சீரும் சிறப்புமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

இரண்டாவதாகக் காயிதே மில்லத் அவர்கள் பிறந்த மாவட்டமான திருநெல்வேலியில் கொண்டாடப்பட்டது.

மூன்றாவதாக வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடியில் 30.7.95 அன்று, மிகவும் சிறப்பான முறையில் காயிதேமில்லத் நூற்றாண்டு விழா நடைபெற்றது. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துணிநூல் துறை அமைச்சர் புலவர் திருமதி இந்திர குமாரி அவர்கள் காயிதேமில்லத் புகைப்படக் கண்காட்சியையும் மற்றும் அவர் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், தமது உரையில்- "கண்ணியத்திற்கும் மரியாதைக்குமுரிய காயிதேமில்லத் முகமது



இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு அவருடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதில் பேருவுவகையும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். காயிதேமில்லத் அவர்கள் **1945-**ஆம் ஆண்டிலிருந்து முஸ்லீம் லீக் தலைவராகத் தொடர்ந்து இருந்திருக்கின்றார். அவருக்குச் சீரும் சிறப்புமாக விழா எடுப்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகவும் அக்கறையுடன் உள்ளார் எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தலைமையேற்று உரை ஆற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் "காயிதேமில்லத் அவர்கள் மொழிப் பற்று மிக்கவர். வாழ்கின்ற போது வரலாறு படைத்தவர்களுக்கு, அவர்களை நினைவுகூரும் வகையில் அரசு சார்பில் விழா எடுக்கப்பட்டு வருகிறது; அதன் பொருட்டு, காயிதேமில்லத் நூற்றாண்டு பிறந்தநாள் விழா அரசு சார்பில் கொண்டாடப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் முன்னிலை உரை நிகழ்த்திய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசுகையில் "கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்களின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களிடம் பரிந்துரை செய்துள்ளார். அதன் அடிப்படையில் விரைவில் மத்திய அரசால் கண்ணியமிக்க காயிதேமில்லத்திற்கு அஞ்சல் தலை வெளியிடப்படவுள்ளது" என்று தெரிவித்தார்.

சிறப்புரை நிகழ்த்திய தமிழ் மாநில முஸ்லீம் லீக் தலைவர் சிராஜில் மில்லத் அப்துல் சமது அவர்கள் பேசுகையில் "காயிதேமில்லத் அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழ்நாடு முழுவதும் தமிழக அரசால் அதற்குரிய சிறப்போடும், கண்ணியத்தோடும், கொண்டாடப்பட்டு வருகிறது. காயிதேமில்லத் அவர்கள் காலமாகி ஏறத்தாழ **24** ஆண்டு ஆகிவிட்ட போதிலும் கூட, இன்றும் அவரின் வாழ்க்கை நினைவுகூரப் படுகிறது. அவருடைய போதனைகள் எடுத்துரைக்கப் படுகின்றன. இதற்குக் காரணம் காயிதெமில்லத் அவர்கள் மனிதர்களை ஆழமாக நேசித்தார்கள். ஆகவேதான் மக்களாலும் ஆழமாக நேசிக்கக்கூடியவராக இன்றும் இருந்து வருகின்றார்."

தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தோல்வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு கே. பாண்டுரங்கன், மாநில தேசியச் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுத் தலைவர் மற்றும் பேரணாம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு டாக்டர் ஜே. பரந்தாமன், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத் தலைவர் திரு கோபால், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டப் பால் வளத் தலைவர் திரு பா. நீலகண்டன் மற்றும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக நிகழ்ச்சியில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ம.ப.

# நுகர்வோருக்கு நீதி

## புலவர் வீ.செ. கந்தசாமி

நுகர்வோரே நுகர்வோரே ஓடி வாருங்கள்
நுமதுகுறை என்னவென்று எடுத்துக் கூறுங்கள்
தகராறு வேண்டாங்க எங்கு பார்த்தாலும்
நுகர்வோரின் குறை தீர்க்க மன்றம் இருக்குதே!

விலைகொடுத்து வாங்கிவந்த பொருளைச் சோதித்து
விதித்திருக்கும் தரமதற்கு இல்லை என்பதால்
நிலைகுலைந்து நின்றதெல்லாம் அந்தக் காலங்க!
நீதிக்காக மன்றம்போதல் இந்தக் காலங்க!

சேவைசெய்வ தாகச்சொல்லித் தொகையை வாங்கினோர்
தேர்ந்தசேவை செய்யவில்லை என்று கண்டபின்
சேவைக்கென்று பெற்றதொகையும், இழப்பு ஈடுமே
சேர்ந்தமனச் சோர்வுக்கென்று கேட்டு வாங்கலாம்!

தரங்குறைந்த பொருளைநீங்கள் வாங்கி விட்டதால்
சரியதுபோய்த் தொலையட்டும் என்றெண்ணி விடாதீர்!
சிரமமின்றி நுகர்வோரின் குறைகள் தீர்க்கவே
சிறந்திலங்கும் மன்றம்நாடி நீதி கோருவீர்!

ஆட்சிமக்கள் நலனுக்கென்று போட்ட சட்டத்தை
அனைவருமே பயன்படுத்திக் கொள்ள வேணுங்க
தாழ்ச்சிகொண்ட தரம்குறைந்த பொருளை வாங்கியோர்
தயங்கிடாது மன்றம்சென்று நீதி வேண்டுவீர்!

---

விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள், வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள், விழாத் தொடக்கவுரை ஆற்றினார். முடிவில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு பா. நாராயண மூர்த்தி நன்றி கூறினார்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையில், புகைப்படக் கண் காட்சி 30.7.95 முதல் 1.8.95 முடிய மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. பொதுமக்களும், பள்ளி மாணவ மாணவிகளும் திரளாக வந் திருந்து அதனைக் கண்டு பயன் அடைந்தனர்.

**—எம். விஜயகுமார்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் - விளம்பரம் - வேலூர்

# கலையாத கலை எங்கள் கலையே!

**—டாக்டர் பத்மாசுப்பிரமணியம்**

இன்று 21-ஆம் நூற்றாண்டை நோக்கி- அதாவது இன்னும் 5 ஆண்டுக் காலத்திற்குள் அடுத்த நூற்றாண்டிற்குள் நுழைய இருக்கிறோம். அடுத்த நூற்றாண்டில் கலைகள் எப்படி இருக்கப்போகிறது என்று, ஒரு ஜோசியம் போல நாம் இப்போது சொல்லமுடியாது; என்றாலும், ஜோதிடக் கலை என்பதே, வரப்போகும் நல்லது கெட்டதை அறிந்துகொண்டு, அதற்குத் தகுந்தாற்போல நம்மைத் தயார் செய்து கொள்வதற்காகத்தான். அந்த வகையில் தான் இந்த ஏற்பாடுகள் என்று தான் நினைக்கிறேன்.

ஒரு தீர்க்க தரிசனத்தோடு முதல்வர் அவர்கள் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருப்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது. அந்தத் தீர்க்க தரிசனத்தில்தான் அவர் — 'முத்தமிழ் என்று சொன்னால் போதாது; விஞ்ஞானத்தையும் சேர்த்து நான்கு தமிழாகச் சொல்ல வேண்டுமென்று' மிக அருமையாக ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நமக்குப் பின்னர் வரக்கூடிய விஷயங்களை நினைத்துப் பார்க்கும்போது, சில சரித்திர நிகழ்ச்சிகளையும் மனதில் கொண்டு, அதை ஒரு வழிகாட்டியாக நாம் எடுத்துக் கொண்டு 'புதியன புகுதலும், பழையன கழிதலும்' என்ற கருத்தோடு, நாம் எதிலும் இறங்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது, பழையன எல்லாமே ரொம்ப நல்லது என்று எடுத்துக்கொள்ளவும் முடியாது. புதியன எல்லாம் கெடுதல் என்று விடவும் முடியாது. ஆகவே, ஒரு வார்த்தை ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். அதாவது, Balance-அது நமக்கு மிகவும் தேவையாக உள்ளது. அந்தக் காலகட்டத்தில்தான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

மாறுதல் என்பது இன்றியமையாத ஒரு விஷயமாகும். மரபையே பிடித்துக்கொண்டு, மாறவேமாட்டேன், என்று நினைத்து முரண்டு செய்து கொண்டிருந்தால், காலத்தோடு சேர்ந்து நாம் நகராமல் தேங்கி விடும் ஒரு அபாய கட்டத்தில் இருந்துவிடுவோம். ஆகவே, மாறுதல் என்பது அவசியம்தான். ஆனால், எதை மாற்ற வேண்டும், எதை மாற்றக்கூடாது என்றும் நாம் சற்றுக் கவனமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

கலைகள் மனித வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாகும். இவை மனிதமேம்பாட்டின் நிலையைச் சித்திரிக்கும் வெளிப்படைப் பொருள்களாகும். மனித எண்ணங்கள், தெள்ளத் தெளிந்த புனித கங்கையாக ஓடும்போது, கலைகளும் அந்தக் கலவரமற்ற, கசடற்ற, குழப்பமற்ற நிலையைச் சித்திரித்து, மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. அக்கலையில் 'சிமிட்ரி' என்று சொல்லுவோமே, அந்தச் சீரான பரிணாமங்கள் இருப்பதைக் காணலாம்.

இன்று தஞ்சை ஆலயத்தில்- பெருவுடையார் ஆலயத்தில் சென்று நீங்கள் பார்ப்பீர்களானால், அங்கு இருக்கும் சித்திரங்களும், சிற்பங்களும் காலத்தைக் கடந்து நிற்கின்றன. அந்தச் சிற்பங்களைக் காணும் போது, மனதில் ஒரு சாந்தம் ஏற்படுகிறது. ஏனென்றால், ஒரு சிற்பியோ நடனக் கலைஞரோ, இசைக் கலைஞரோ, அவருக்குள்ளே ஒரு கொந்தளிக்கும் மனம் இருந்தாலும், அந்தக் கொந்தளிப்புகளைக் கலையில் பிரதிபலிக்கச் செய்யக்கூடாது என்பது நம்நாட்டு மரபு. மனக் குழப்பங்களுக்கு அப்பாற்பட்ட அந்த 'சாந்தி' என்ற மனோ பக்குவ நிலையில்தான் கலைஞர்கள் இயங்க வேண்டும். அப்பேர்ப்பட்ட ஒரு கலையைத் தான் ரசிகர்களுக்கு நாம்

அளிக்க வேண்டும். உலகில் ஏற்கெனவே எத்தனையோ குழப்பங்கள். எங்கு திரும்பினாலும் 'டென்ஷன்'. இந்த டென்ஷனை அதிகப்படுத்துவதற்காகவா நாம் ஒரு கலை நிகழ்ச்சிக்குப் போகிறோம்? அங்கே போய் மனதிற்கு ஒரு சாந்தி ஏற்பட வேண்டாமா?

சமச்சீர் என்று சொல்லக் கூடிய 'சிமெட்ரி அண்டு புரப்போஷன்' - இது சுருதி சேர்ந்து பாடுவதற்கு ஒப்பாகும். ஒரு கலைஞன் 'நான் சட்ஜமத்திலும், பஞ்சமத்திலும் மட்டும் சுருதி சேர்த்துப் பாடுகிறேன், மற்ற சுரங்களை என்னால் சுருதி சேர்த்துப் பாட முடியாது' என்றால் எப்படியிருக்கும்? யார் கேட்பது? இந்த அபசுரத்தைக் கேட்டால், அது தலைவலி! மட்டுமல்ல ; அது மகாபாவமும் கூட. தலையே குழம்பிப் போகும்.

நம் சாஸ்திரம் சொல்கிறது தவறான அதாவது 'சிமெட்ரி' இல்லாத ஒரு சிற்பத்தைப் பார்ப்பதோ, செய்வதோ மகத்தான பாவம். அதேபோல தாளம் இல்லாமல், ஒரு லாவகம்- அழகு இல்லாமல் இருக்கக்கூடிய நடனத்தைப் பார்ப்பதும் செய்வதும் மகாபாவம். நான் பாவம் என்று சொல்கிறேன் என்றால் இதை விஞ்ஞான முறையிலும் கூட விளக்க முடியும்.

இப்பொழுது விஞ்ஞானிகள் சொல்கிறார்கள் every object has a radiation என்று. ஒவ்வொரு பொருளிலிருந்தும் சில vibrations, radiations, அலைகள், ஒலி அலைகள் கிளம்புகின்றன. நம் முன்னோர்கள், இசையையும், நடனத்தையும், சிற்பத்தையும் ஆலயங்களில் ஒரு வழிபாட்டு முறையோடு ஏன் சேர்த்து வைத்தார்கள் என்று யோசனை செய்து பாருங்கள். இவை மங்கலம் தரக்கூடியவிஷயங்கள். மங்கலம் என்றால் ஏதோ ஆடுபவர்களுக்கும், பாடுபவர்களுக்கும் மட்டுமல்ல; ஊருக்கு நல்லது, நாட்டுக்கு நல்லது. இந்தக் கலைகளைக் கண்கொண்டு பார்ப்பதால், காது கொடுத்துக் கேட்பதால் ரசிகர்களுக்கு மனதிலும் ஒரு அமைதி ஏற்படும் என்பதால் வழிபாட்டோடு சேர்த்து வைத்தார்கள் நம் முன்னோர்கள்.



**எப்படிப்பட்ட கலையானாலும் சரி அது ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் சிறிதும் உதவுவதாய் இருக்கக்கூடாது!**



**பகுத்தறிவு என்னும் ஒரே மருந்தால்தான் மூடநம்பிக்கை என்னும் நோயைப் போக்க முடியுமே தவிர, வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது.**

இப்பொழுது **21-ஆம்** நூற்றாண்டை நாம் நெருங்கிக் கொண்டிருக்கையில் யோசனை செய்துபார்த்தால், இந்த முறை மாறிவிடுமோ என்று சற்று பயமாக இருக்கிறது.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் எழுதினார்கள். "கலையாத கலை எங்கள் கலையே" என்று. எவர் கலைத்திட நினைத்தாலும், மறுத்தாலும், எதிர்த்தாலும், கலையாத கலை எங்கள் கலையே என்ற ஒரு ஆர்வத்தோடு, கவிதையிலும், கட்டடக் கலையிலும், சிற்பத்திலும், ஓவியத்திலும், இசையிலும், நடனத்திலும், சினிமாவிலும், நாடகத்திலும், என்று எல்லா விதத்திலும் புதுமையைப் புகுத்த வேண்டுமென்ற ஒரு எண்ணத்தோடு அடிக்கடி நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

மேல் நாட்டவர் எதைச் செய்கிறார்களோ, அதில் கூட அவர்கள் செய்யும் எத்தனையோ நல்ல விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. அதையெல்லாம் விட்டுவிட்டு- எப்பொழுதுமே கெடுதல் வேகமாக வரும்; அது போல அங்குள்ள மெசின் மியூசிக், அங்குள்ள சில- அது நாட்டியம்தானா? எனக்கு சொல்லத் தெரியவில்லை. நடனம் என்று சொல்கிறார்கள். சட்டென்று பார்த்தால் காக்கா வலிப்பு மாதிரி இருக்கும். அது எதைக் காட்டுகிறது என்றால் மனதிலே ஒரு அமைதியில்லாத தன்மையையும், மூளையிலே ஒரு தெளிவு இல்லாத அறிவினையும் காட்டுகிறது.
ஒரு வரையறைக்குள் இல்லாத, தெளிவு இல்லாத

சுரங்கள். இந்த மைக்கேல் ஜாக்சன் எல்லாம் தமிழ்நாட்டுக் குத் தேவையா?

மற்ற எல்லாக் கலைகளையும் விட அதிகமாகத் தமிழ் மரபைப் பாதுகாத்துவந்த ஒரு கலை பரதக் கலை என்று சொல்ல வேண்டும். ஆனால் அதற்குக் கூட அண்மையில் சில ஆண்டு களாகச் சில அபாயங்கள் வந்திருக்கின்றன. அண்மையில் நான் ஒரு பூ விற்கும் பெண்ணிடம் கேட்டேன், அவள் சின்னப் பெண், வயது 10 லிருந்து 12-க்குள் இருக்கும். ஆடுவாயா என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண் "ஆடுவேன்" எனச் சொல்லி, நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை; ஒருவரின் பெயரைச் சொல்லி; ஒரு ஆபாசமான திரைப்படப் பாடலையும் சொல்லி "நான் ஆடுவேன்" என்று சொன்னாள். அவள் எங்கள் தஞ்சை மாவட் டத்தைச் சேர்ந்த பெண் என்பதை நினைக்கும்போது மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. நான் மிகவும் வருத்தப்பட்டேன். ஏனென்றால் நான் இந்தக் காவிரி மண்ணைச் சேர்ந்தவள்.

இது ஒருபுறம் இருக்க- இன்னொரு பக்கத்தில் பார்க்கிற போது, அப்படியே மரபையே பிடித்துக்கொண்டு சற்றும் மாறமாட்டேன் என்று பிடி வாதம் பிடிக்கும் இன்னொரு சாராரும் இருக்கிறார்கள். மரபு வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், கண்களைச் சற்று அகல விரித்து, நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டியது கலைஞர்களுக்கு மிகவும் தேவையான ஒரு விஷயம். அந்தக் காலத்திலே சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால்கூட, பரதத்தை எடுத்துக்கொண்டால் தஞ்சை பாணி, பந்தனைநல்லூர் பாணி, வழுவூர் பாணி, காஞ்சிபுரம் வழி என்றெல்லாம் பிரித்துப் பேசுவோம்.

> **உரிமையைத் தருவதற்குத் தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகம் தேவை.**
>
> **—பேரறிஞர் அண்ணா**

இன்னும் சொல்லப்போனால், நான் கற்றுக்கொள்ளத் தொடங் கிய அந்தச் சமயத்தில் ஒரு பாணியில் கற்றுக்கொள்ளும் ஒரு மாணவி, இன்னொரு பாணி யில் பரதத்தை ஆடுபவர்களை பார்க்கக்கூடக் கூடாது. அவ்வளவு கடுமையாக இருப்பார்கள். 'அந்த வீட்டு மரபைப் பார்த்து உங் களுக்குப் பாதிப்பு ஏற்படு கிறதா?' என்று உடனே குருநாதர் கேட்பார். தமிழ்நாட்டில் ஒவ் வொரு கிராமத்திலும் ஆலயங் களில் தேவர் அடியார்கள் மிகச் சிறப்பாக இந்தக் கலையைக் காப்பற்றி வந்தார்கள்.

ஒவ்வொரு ஆலயத்திலும், சாஸ்திரிய நடனமும், நாதஸ்வ ரமும், ஓதுவார்களின் இசையும் அந்தந்த கிராமத்துப் பொது மக்களுக்குக்கூட இலவசமாக சாஸ்திரிய ரீதியில் கிடைத்து வந்தன. இந்த 50 ஆண்டுகளில் என்ன நடந்தது என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆயிரம் ஆண்டுகளாகத் தஞ்சை ஒரு கலைக்களஞ்சியமாக, அதுவும் பரதத்திற்குப் பேர்போன இடம் தஞ்சை; இங்கிருந்தும் மற்ற பந்தனைநல்லூர் போன்ற கிராமங்களிலிருந்தும் பெரிய பெரிய நடன ஆசிரியர்கள் சென்னைக்குச் சென்று விட்டார்கள்.

ஒரு காலத்தில், 50 ஆண்டு களுக்கு முன்னால்- ஆடுவது என்பது சமூகத்தில் ஒப்புக் கொள்ளப்படாத ஒரு வழக்கமாக இருந்தது. ஆனால் இப்போதோ—

The pendulum has swung to the other extreme!

ஆடுவது என்பது ஒரு Status symbol ஒரு Fashion, Social Snobbery என்று ஆகிவிட்டது. சென்னையைப் பொறுத்தவரை யில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது ஆடுவதற்கு இருக் கிறார். அநேகமாக சென்னை யில் ஒவ்வொரு தெருவுக்கும் ஒவ்வொரு நடனப்பள்ளி இருக்கும். இது சென்னையைப் பொருத்தவரையில் சரி. ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற மற்ற இடங்களைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பாருங்கள். வழுவூரில் நடனம் கிடையாது. திருவாலங் காட்டில் ஒன்றுமே கிடையாது. எப்பேர்ப்பட்ட நடன சாலை களிலும், ஷேத்திரங்களிலும் இன்று நடனம் பயிற்றுவிப்ப தற்கு யாருமே இல்லை. நடனம் தெரிந்தவர்களை மற்ற மாவட்டங்களில் பார்ப்பதே அரிதாகிவிட்டது.

ஆகவே நம்முடைய சிந்தனைச் செல்வி- புரட்சித்தலைவி அவர்களுக்கு இங்கிருந்து நான் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். எங்கிருந்து பரதம் வந்ததோ, எங்கிருந்து இசை வந்ததோ- அதாவது சென்னைக்கு வந்ததோ, ஆங்காங்கே அந்தக் கலைகளைத் திருப்பிக் கொண்டு செல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாவட்டங்களில் நடனப் பள்ளிகள் தொடங்க வேண்டும். நடனக் கல்லூரிகள் இசைக் கல்லூரிகள் தொடங்க வேண்டும். சென்னையில் மட்டும் அல்லாமல் அதாவது 'டிசென்ட்ரலைஸ்ட் கல்சுரல் ஆக்டிவிட்டீஸ்' செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், வெறும் தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்- சில சமயங்களில் தொலைக்காட்சியே தொல்லைக் காட்சியாக மாறிவிடுகிறது! அதில் வருகின்ற கலைகளைத் தான் கிராமப்புற வாசிகளும் இனிமேல் கற்றுக்கொள்ளுவார்கள். நம் கலைகள் அழிந்து விடும். ஆகவே 21-ஆம் நூற்றாண்டுக்குச் சில முக்கியமான விஷயங்களை நாம் மேற்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இசைக் கல்லூரிகளும், சாஸ்திரிய நடனக் கல்லூரிகளும் தொடங்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ச் சமூகத்தைப் பற்றி இங்கே பேசிய மதிப்பிற்குரிய டத்தோ குமரன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதாவது தமிழர்கள் வெளிநாடுகள் சென்று இயங்கி வருகிறார்கள். மலேசியா, சிங்கப்பூர், சவுத் ஆப்பிரிக்கா, மொரீசியஸ், போன்ற பல நாடுகளில் நம் அன்புச் சகோதர சகோதரிகள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய பண்பாட்டுத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற ஒரு முக்கியமான வேண்டுகோளை எடுத்துச் சொன்னார்கள்.

இதுகுறித்து டிசம்பர் 21-ஆம் தேதி சென்னை தமிழ் இசைச் சங்கத்தார் எனக்கு இசைப் பேரறிஞர் பட்டம் அளித்த அந்தச் சமயத்தில் இதையே நான் கூறி, தமிழ் இசையையும் நம் கலாச்சாரத்தையும் தமிழர்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் பரப்புவதற்கு நம் அரசாங்கத்தின் துணையோடு சில முயற்சிகளை மேற்கொண்டு, ஓதுவார்களை அங்கு அனுப்பி, நடன ஆசிரியர்களை அங்கு அனுப்பி நம் கலைகளை மீண்டும் அவர்கள் மறக்காமல் தொடர்புகொள்ளத் தேவையான சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்.

நான் மொரீசியஸ் நாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு ஒரு டாக்சி ஓட்டுநரைச் சந்தித்தேன். உங்கள் பெயர் என்ன என்று நான் கேட்டபோது, அவர் டங்கிணமுட்டு என்று சொன்னார். என்ன என்று யோசனை செய்து பார்த்ததில் தட்சிணா மூர்த்தி என்பதே அது நீங்கள் இந்துவா என்றேன். இல்லை நாங்கள் திராவிடர் என்றார்.

கோவிலுக்குப் போகமாட்டீர்களா என்றேன். டுக்கே கோவிலுக்குப் போவோம் என்றார். டுக்கே கோவில் என்றால் என்ன என்று யோசனை செய்து பார்த்ததில் துர்க்கை கோவில் என்று தெரிகிறது. பிறகு வேறு என்ன ஆலயங்கள் எல்லாம் இருக்கின்றன என்றேன். நாங்கள் திராவிடர்கள், ஆகவே டுக்கே கோவிலுக்குப் போவோம், தெலுங்கு பேசுகிறவர்கள் ஆந்திரர்கள். அவர்கள் வேறு மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் இராமர் கோவிலுக்குப் போவார்கள். இந்தி பேசுகிற மக்கள்தான் இந்துக்கள்; அவர்கள் கிருஷ்ணர் கோவிலுக்குச் செல்வார்கள், இந்தியில் பாடுவார்கள் என்றார். நீங்கள் தமிழில் பாடுவீர்களா என்றேன். இல்லை நாங்கள் ஆங்கிலத்தில் தான் பேசுவோம் என்றார்.

எத்தனைக் குழப்பங்கள் பாருங்கள். ஆங்கிலேயர்கள் நம்மைப் பிரிப்பதற்காக எழுதி வைத்துவிட்டுச் சென்ற அந்த ஆரியர், திராவிடர் இனம் போன்றவைகளையெல்லாம் சரித்திரக்காரர்களே மறந்து விட்டார்கள். ஆனால் அந்த விஷயங்கள் எல்லாம் எவ்வளவு குழப்பங்களைச் செய்கின்றன

**மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.**

**–பேரறிஞர் அண்ணா**

# 25 மாவட்டங்களும் தலைநகரங்களும்

1. சென்னை மாவட்டம் - சென்னை.

2. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் - காஞ்சிபுரம்.

3. வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் - வேலூர்.

4. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் - திருவண்ணாமலை.

5. தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் - கடலூர்.

6. விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம் - விழுப்புரம்.

7. தர்மபுரி மாவட்டம் - தருமபுரி.

8. காமராஜர் மாவட்டம் - விருதுநகர்.

9. கன்னியாகுமரி மாவட்டம் - நாகர்கோவில்.

10. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் - சிவகங்கை.

11. இராமநாதபுரம் மாவட்டம் - இராமநாதபுரம்.

12. சேலம் மாவட்டம் - சேலம்.

13. பெரியார் மாவட்டம் - ஈரோடு.

14. கோவை மாவட்டம் - கோவை.

15. நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம்.

16. திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் - திருச்சி (புதியது).

17. கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டம் - கரூர் (புதியது).

18. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் - பெரம்பலூர் (புதியது).

19. புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை.

20. தஞ்சாவூர் மாவட்டம் - தஞ்சை.

21. நாகப்பட்டினம் காயிதெ மில்லத் மாவட்டம் - நாகப்பட்டினம்.

22. திண்டுக்கல் அண்ணா மாவட்டம் - திண்டுக்கல்.

23. மதுரை மாவட்டம் - மதுரை.

24. சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடி.

25. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் - திருநெல்வேலி.

என்று பாருங்கள்!

அப்படி ஆரியர், திராவிடர் இனம் என்று நம்மைக் குழப்பி விட்டுச் சென்ற ஆங்கிலேயர், அண்மையில் மொரீசியசில் இதுபோன்று மற்றொரு குழப் பத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்றி ருக்கிறார்கள். ஆகவே அந்த மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. 21-ஆம் நூற்றாண்டில் நம் கலைகள் என்று நினைக்கும்போது ஆங் காங்கே இருக்கும் அவர்களை யும் சேர்த்து நாம் நினைத்துக் கொள்கிறோம்.

மாறுதல்கள் எவ்வளவு வந்தாலும் நம்முடைய ஆதார அழகுணர்ச்சிகள் மாறாமல், அதேநேரத்தில் காலத்தைக் கடந்து நிற்கும் சில கருத்துக் களை எடுத்துச் சொல்லும் அளவுக்கு நல்ல கலைகள் வளர வேண்டும். அதற்காக எங்களைப் போன்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களோ அதை யெல்லாம் செய்ய நாங்கள் காத்திருக்கிறோம்; என்றும் எங்களுடைய பரிபூரண ஒத் துழைப்பைத் தருவோம்.

நான்காம் அட்டை சொல்லும் செய்தி

## தமிழக மின்திட்டத்தில் முதலீடு

அமெரிக்க சி.எம்.எஸ். மின்சாரக் கம்பெனியின் தலைவரும், அமெரிக்க மின் விநியோகக் கம்பெனி ஒன்றின் துணைத் தலைவருமான திரு விக்டர் பிரைலிங், சி.எம்.எஸ். கம்பெனியின் நிர்வாக இயக்குநர் திரு ஜேம்ஸ் குக், அந்தக் கம்பெனியின் திட்ட அமல் இயக்குநர் திரு அனில் மிஸ்ரா மற்றும் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு திமோத்தி ஹவுசர் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை 28.7.95 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

சி.எம்.எஸ். மின் நிலையம் அமைவதில் அமெரிக்க முதலீடு வருவதில் உள்ள இடையூறுகளை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். விரைவில் பணிகள் தொடங்கும் வகையில் பணிகளை விரைவுபடுத்தும்படி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இந்திய அரசிடமிருந்து 'கியாரண்டி' பெறுவதில், கால தாமதத்தை நீக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு பொதுப்பணி மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோரும் இந்த ஆலோசனையின்போது உடனிருந்தார்கள்.

## போர்டு கார் நிறுவனத்தினர் சந்திப்பு

சென்னை அருகே ரூபாய் 2 ஆயிரம் கோடி முதலீட்டில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் கார் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, போர்டு மகேந்திரா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட இருக்கும் திரு ஜான் சி. பார்க்கர், இந்தியச் செயல்பாடுகளுக்கான இயக்குநர், லூயிஸ் ஸ்பீர், போர்டு மோட்டார் உற்பத்திப் பிரிவு இயக்குநர் திரு ஜெப் பாடி ஆகியோர் தலைமைச் செயலகத்தில் 25.7.95 அன்று சந்தித்துப் பேசினார்கள்.

தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலை தொடங்கப்பட்டால், விரைவில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்போம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி கூறினார்.

இறுதியான முடிவுடன் அடுத்த மாத இறுதியில் மீண்டும் வருவதாக போர்டு நிறுவனத்தினர் மாண்புமிகு முதல்வரிடம் கூறினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு டிமோதிபி ஹவுசர், தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., தொழில்துறை முதன்மைச் செயலாளர், திரு சி. இராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னதாக, போர்டு நிறுவனத்தினர் கார் தொழிற்சாலைக்காக, தமிழக அரசு தருவதாக இருந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தனர்.

## உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு

ஆசிரியர்: முனைவர் தி. மகாலட்சுமி

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113.

விலை: ரூ.35 பக்கம்: 214

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி வெளியிடப் பட்டுள்ள அரிய நூலாகும் இது. முந்திய ஏழு உலகத் தமிழ் மாநாடுகளிலும் படிக்கப்பட்ட ஆய்வரங்கக் கட்டுரைகள்_ மலர்க் கட்டுரைகளின் நூலடைவாகத் திகழ்கிறது.

இந்நாட்டில் வாழும் தமிழர்கள் மட்டுமன்றி, வேறு எந்நாட்டில் வாழும் தமிழர்களும் எண்ணியெண்ணி இறும்பூதெய்தும் வகையிலே நடைபெற்று வருகின்றன உலகத் தமிழ்மாநாடுகள். அம் மாநாடுகளில் நடைபெறும் கருத்தரங்குகளில் கருத்துச் செறிவுமிக்கக் கட்டுரைகள் கற்றறிவாளர்களால் படிக்கப்படுகின்றன. மாநாட்டு மலரை அணி செய்கின்றன. இடம்பெற்ற கட்டுரைகள் அனைத்தும் எவ்வெத் தலைப்புகளிலே அமைந்திருந்தன என்பது அறியப்பட்டால் இனி நிகழவிருக்கும் உலகத் தமிழ் மாநாடுகளிலே புதிய தலைப்புகள் தரப்படலாம் அல்லவா? இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே 'உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு' என்கிற இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

மூன்று இயல்களைக் கொண்டு விளங்குகிற இந்நூல் தமிழறிஞர்கள் விரும்பி வரவேற்கும்படியான நன்னூல்.

–'சோழராஜா'




## வாசன் தமிழ் நீதிச் செல்வம்

உரையாசிரியர்கள்: புலவர் ச. சீனிவாசன், வித்துவான் நா. பழனியப்பன்

வெளியீடு: சாந்தா பப்ளிஷர்ஸ் 5, ஸ்ரீபுரம் 2வது தெரு, சென்னை - 600 014.

விலை: ரூ.35 பக்கம்: 506

'செல்வத்துட் செல்வம், நீதிச் செல்வம்' என்று சொல்லக்கூடிய வகையில், தமிழ் மொழியில் ஏராளமான நீதி புகட்டக்கூடிய அரிய செல்வங்கள் குவிந்துள்ளன. அவற்றுள் பன்னிரண்டு செல்வங்களை உள்ளடக்கியதாக இத் தொகுப்பு அழகுறத் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம், புதிய ஆத்திசூடி பாரதியார், பாரதிதாசன் ஆத்திசூடி ஆகிய பன்னிரண்டு நூல்களே அவை.

எளிதாக நினைவில் வைப்பதற்கும், ஒரு சேரவைத்து ஆய்வு செய்வதற்கும், கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் இந்நூல் பெரிதும் உதவும்.

காலத்துக்கு ஏற்ற வகையில், எளிய இனிய நடையில் எல்லாத் திறத்தாரும் படிப்பதற்கு ஏற்றவகையில் உரை விளக்கம் அமைந்துள்ளது இதன் தனிச் சிறப்பு. குறிப்பாக, பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் கருத்துக் கருவூலம் இது.

–பி.வி. கிரி

## திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும்

ஆசிரியர்: அ.கி. பரந்தாமனார்

வெளியீடு: அல்லி நிலையம் 19, முத்து முதலித் தெரு சென்னை 600 007

விலை: ரூ.15 பக்: 96

உலகப் பொதுமறையாம் திருக்குறளை, உலகப் பேரறிஞர்கள் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார்கள் - ஆராய்ந்து வருகிறார்கள். இந்நூலில், அரசியல், பொருளாதாரம், பண்பாடு, உடல் நலவழி, சர்வோதயம் ஆகிய புதுமைக்கருத்துக்கள் ஆராயப்பட்டு உள்ளன. தமிழ் ஆர்வலருக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில், நூலில் கருத்து மணிகள் ஒளிவீசுகின்றன. ஆசிரியரின் தெளிவான சிந்தனை, நடை எல்லாம் மனத்தில் பதியத் தக்கனவாய் இருக்கின்றன.

## அமரத்துவத்தை நோக்கி

வெளியீடு: மகரிஷி க. அருணாசலம் அறக்கட்டளை தமிழ்நாடு சர்வோதய மண்டல்.

விலை 12 பக்கம் 114

மகரிஷி க. அருணாசலம் அவர்களின் 85-வது பிறந்தநாள் விழா

'நூல்நயம்' பகுதிக்கு, இரண்டு படிகள் நூல்கள் அனுப்ப வேண்டும்.

- ஆசிரியர்

விற்கு வந்த வாழ்த்துச் செய்திகளின் தொகுப்பு இந்நூல்.

திரு அருணாசலம் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் கல்வி பயின்று, பல்கலைக் கழகங்களில் சிறந்த பதவிகள் வகித்ததாலும், தலைசிறந்த ஆன்மீகவாதியாக, சிறந்த காந்தீயவாதியாக தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் என்பதை இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது.

## உலகில் பெண்ணே சிறந்தவள்

ஆசிரியர்: இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசன்

வெளியீடு: தங்கவயல் பதிப்பகம்
52, முத்து முதலி தெரு,
சென்னை 600 014.

விலை ரூ.17 பக்கம் 136

பெண்களின் அறிவாற்றல், இதிகாசங்களில், சரித்திரத்தில் அவர்களின் பங்கு, மற்றும் சமயங்களில் பெண்கள், பெண் கவிஞர்கள், முதலான சிறப்புகளை எளிமையாக அழகாக எடுத்துக்கூறுகிறது இந்நூல்.

## 'அழகிய அந்தமான்'

ஆசிரியர்: கடவூர் மணிமாறன்

வெளியீடு: விடியல்
வெளியீட்டகம்,
109, மேலைத் தெரு,
கிருட்டிணராயபுரம்,
639 102.
திருச்சி மாவட்டம்.

விலை: ரூ.25 பக்கம்: 160

வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கச் சார்பில், பல்துறைப் பெருமக்கள் ஒன்று கூடி தங்கள் தொழில், பதவி அனைத்தையும் மறந்து தமிழ்க் கவிஞர்களாய் அந்தமான் தீவுக்குச் சென்று திரும்பிய அனுபவ நூல் இது.

கப்பலிலேயே பாட்டரங்கம், நூல் வெளியீட்டு விழா, பட்டி மன்றம் என்று நிகழ்ந்த பல புதுமைகளை விவரிக்கிறது இந்நூல்.

## உணவும் வாழ்வும்

ஆசிரியர்: பிக்ஷூ சுவாமிகள்


வெளியீடு: தமிழ்நாடு இயற்கை
மருத்துவச் சங்கம்,
காந்தி நினைவு நிதி,
மதுரை - 625 020.

விலை: ரூ.15.00 பக்கம்: 142

பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ததன் பயனாகவும், நோயாளிக்குச் சிகிச்சை செய்து வந்ததன் பயனாகவும், சிகிச்சையில் உணவுச் சிகிச்சையே சிறந்தது என்கிறது இந்நூல்.

நான்கு பாகங்களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ள இந்நூலில் இயற்கை உணவு, உபவாசம், உணவு வகைகள், எவ்வாறு உண்பது? நோயும் அதற்கான உணவு வகைகளும், உணவுக்குத் துணைக் கருவிகளான ஒத்தடம், மட்பூச்சு, தொட்டிக் குளியல், யோகாசனம் போன்றவையும், உண்ண வேண்டிய உணவுகளும் அவற்றின் குணங்களும் என்று மிக விரிவாக, எழுதப்பட்டுள்ள பயனுள்ள நூல் இது.

—குமாரசாமி



## குணவாகடம்

பதிப்பாசிரியர்: முனைவர்
வே. நெடுஞ்செழியன்

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம்,
தரமணி,
சென்னை 600 113

பக்கம்: 189 விலை ரூ.40

பழம்பெருஞ் சுவடிகளைத் தேடிப்பிடித்து, அவற்றைத் தனி நூலாக வெளியிடும் பெருமையைப் பெற்றிருக்கிறது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். அவ்வமைப்பின் மூலம் அவ்வாறாக வெளியிடப்பட்டிருப்பதே 'குணவாகடம்' என்கிற இந்த நூல்.

சிந்து வெளியில் தோன்றியதாகக் கருதப்படும் சித்தமருத்துவம் தொடர்பான இந்நூல், அகத்தியரால் எழுதப்பட்டது என எண்ணப்படுகிறது. வட நாட்டிலும் தென்னாட்டிலும் 37 அகத்தியர்கள் இருந்தார்கள் எனக் குறிப்புகள் பல உள்ளன. இந்நிலையில் இதை இயற்றியவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டினராக இருக்கலாம் எனப் படுகிறது.

இந்த நூலில் நோய்கள் ஆராயப்படுகின்றன. நோய்களின் குறி குணங்கள் சொல்லப் படுகின்றன. அவற்றின் தன்மைகள், நோய் தீர்க்கும் வழிவகைகள் தெரிவிக்கப்படுகின்றன.

பழஞ்சுவடிகளில் உள்ள பைந் தமிழை இவ்வாறு நூலாக்கிய பெருமுயற்சியில் வெற்றி கண்டிருக்கிறார் பதிப்பாசிரியர்.

ஆகமொத்தத்தில் சித்த மருத்துவத்துறைக்குச் சிறந்த புதையல் போல் உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது இந்நூல்.

—'முடிகொண்டான்'

# இலக்கியத்தில் காதல்

## புலவர் இளஞ்செழியன்

என்தொண்டை வெண்கலத்தில்
வார்த்தெடுத்த
தொண்டை, தொண்டை;எனினும் இந்த
என்தொண்டை தன்னோடு என்றனுக்குச்
சண்டை சண்டை; பொறுத்துக் கொள்வீர்!
ஓடையிலே பூக்காத
ஒய்யாரத் தாமரையே, தமிழே! வெப்பக்
கோடையிலும் எனக்குநல்ல
குளிர்தருவாய் விளங்குகின்ற
தமிழே! அந்தப்
பாடையிலே ஏறும்நாள்
வரைக்கும்என் பக்கம்வரும்
தமிழே! இந்த
மேடையிலே என்கவிதை
மிதந்துவரச் செய்பவளே,
வணங்குகின்றேன்!

தஞ்சையிலே விளைந்துவரும்
செந்நெல் நீ, கன்னல் நீ!
உன்னைத் தூக்கிக்
கொஞ்சையிலே இங்கேநான்
எதைநினைப்பேன்! என்னையே நான்
மறந்து போவேன்!
புஞ்சையிலே பிறந்தவன்நான்.
புழுதியிலே வளர்ந்தவன்நான்.
தமிழே உன்னைத்
தஞ்சையிலே படித்ததனால்
தகுதிபெற்றேன் - புலவனானேன்,
பாடுகின்றேன்.

தாயிருந்து நடத்துகின்ற
தக்கதொரு தஞ்சைநகர்
தமிழ்மாநாட்டில்,
வாயிருந்து பாடுகின்ற
வாய்ப்பு எனக்குக் கிட்டியதால்
பாடுகின்றேன்!
காயிருந்து, கனியாத
கசப்புடைய மனமுடையோர்
இம்மா நாட்டை
நோயிருந்த கண்களுடன்
நோக்குகின்றார், தாக்குகின்றார்;
தாக்கிடட்டும்

இருக்கின்ற நிலைமாற்ற
ஒரு புரட்சி மனப்பான்மை
இந்த நாட்டில்
இருக்கின்றதா என்று
எண்ணி எண்ணிப் பார்க்கின்ற
தலைவியன்றோ
இருக்கின்றார் இன்று!
இவரையன்றித் தமிழுக்கு
ஏற்றம் சேர்க்க
இருக்கின்றாராஇங்கே
இன்னும்ஒரு தலைவர்? நீர்

எண்ணிப் பாரீர்!

வரமாக வந்துதித்து
வாய்த்திருக்கும் தமிழகத்தின்
முதலமைச்சர்
கரமாக நான்எனது
கவிதைகளை அவருக்குப்
படைத்திருப்பேன்
உரமாக நான்இருப்பேன்.
உயர்வாக அவருடைய
புகழைச் சொல்வேன்.
தரமாக என்னுடைய
தமிழ்இருக்க முதலமைச்சர்
தருவாய் நிற்பார்.

இவரைப்போல் முதலமைச்சர்
இன்னுமொரு நூற்றாண்டு
போனபோதும் எவர் வருவார்?
எவர்வந்த போதினிலும்
இவரைப்போல்
தொண்டா செய்வார்?
அவர் வருவார், இவர் வருவார்,
ஆளுதற்கென்றே நீர் அலைந்திடாதீர்!
இவரேதான் எப்பொழுதும்
முதலமைச்சராய் வருவார்.
வணங்கு கின்றேன்!

கவியரங்கைத் தொடங்கிவைத்த
கவியரசி இந்திரகுமாரிக்கு
என் வணக்கம்.
செவியரங்கு பலருக்குச்
செம்மைநிலை தன்னில்இல்லை
என்பதாலே, கவிரங்கின் வழியாகக்
கருத்துக்கள் கூறியுள்ளீர்,
உங்கள் பேச்சால்
புவியரங்கு சீர்திருந்தும்,
புலமைநலம் மேன்மையுறும்,
புயல் அடங்கும்.

மந்திரமாய்ச் சொல்லிருக்கும்,
மல்லிகைகள் அதில்மணக்கும்,
பேசும் போது
எந்திரமாய் இருப்போரும்
எழுந்தோடி வந்துங்கள்
பேச்சைக் கேட்பர்.
சுதந்திரமாய்ப் பேசுகின்ற
சுயக்கவிதை வாணியே, ஓர்
சுடர் நிலாவே!
இந்திர குமாரியேஎன்
இதயத்தால் உங்களைநான்
வணங்கு கின்றேன்.

புரட்சித்தலைவியின்
போர்ப்படைத் தளபதிகளாக
வீற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களே!
உங்கள் அனைவருக்கும் என் வணக்கம்!



குருநாதர் சுரதாவே, எனக்கு வேறு
குலநாதர் உன்னை விட்டால் யாரும் இல்லை.
ஒருநாதர் நமக்கெல்லாம் உண்டு அந்த
உத்தமர்தான் பாவேந்தர். அவரை யன்றி
வருநாதன் கவித்துறையில் பலர் வந்தாலும்,
வரவேற்க முடியவில்லை என்னால், நீரே
குருநாதர், குலநாதர், கவிதைத் தூதர்
குளத்துமலர் தாமரையாய்க் குவிக்கின்
றேன்கை!

அவையோரே, அரங்கத்தில் எனை நீக்கி
அறுபடை வீடுபோல இருக்கின்ற
கவிஞர்களே, தீயதான
வினைநீக்கிப் பாடவல்லீர் என்பதால்நீர்
விதிநீக்கிப் பாடினும் குற்ற மில்லை.
தளை நீக்கிப் பாடினும், தமிழை நீக்கித்
தான் பாட ஒருநாளும் ஒப்ப மாட்டீர்.
பனை நோக்கிப் பாடாமல் வானை நோக்கிப்
பாடுங்கள், படையுங்கள், வணங்கு கின்றேன்!

அவையோரே, அரங்கத்தில் அமர்ந்துள் ளோரே
ஆசையிலே ஒரு துளியும் நரை தோன்றாத
அவையோரே! மீசைமட்டும் நரைத்துள் ளோரே!
அறுபதிலும் அவையோரே, காதல் தேடும்
அவ்வியோரே, காதலிக்க நேரம் தன்னை
அன்றாடம் மறைவாக ஒதுக்கு கின்ற
அவையோரே, அரும்பான பருவத் தோரே!
அனைவரையும் இளஞ்செழியன் வணங்கு
கின்றேன்!

காதலுக்கு வழிவைத்துக் கொண்டு நல்ல
கருப்பாதை சாத்திக்கொண் டிருப்பபோரே,
ஏன்
காதலுக்கு மட்டும்அதை வைத்துக்
கொண்டீர்!
கருப்பாதை சாத்தியபின், இருவ ருக்கும்
ஆதரவாய் மிஞ்சுகின்ற ஒன்று அந்த
அன்புடைய நற்காதல் என்று தானே?
சாதலுக்குப் போகும்வரை துணை யிருக்கும்
காதலுக்கு இணையாக இன்னொன்று
இல்லை.

பெண்களின் நிலை உயரும்போது, ஆண்களின் நிலையும் உயரும். இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்!

—அண்ணல் காந்தியடிகள்

காதலுக்கு வயதில்லை. முதுமை யில்லை!
கண்ணற்ற ஒருவனுக்கும் காதல் தோன்றும்!
ஏதுமற்ற வறுமையிலும் சுடு நெருப்பாய்
எரிக்கின்ற காதலினை வெல்வார் இல்லை.
போதிமரப் புத்தனுக்கும், துறவு ஞானம்
பூத்தது அவன் காதலித்த பின்பே யாகும்!
வேதாந்தி என்பவனும் காதலுக்கு
விதிவிலக்காய் இருந்ததாக வரலாறு
இல்லை.

காதல் என்றால் காய்தல்தான்.
மருந்து இல்லாத
காய்ச்சல்தான் மேனியிலே மிஞ்சும், துஞ்சும்.
ஜோதிராம லிங்கராய்நாம் காதல் தன்னை
சுட்டெரிக்க முடியுமானால் வெற்றி கிட்டும்!
வீதியிலே தள்ளாடும் கிழவனையும் விட்டு
வைப்பதில்லை இந்தக் கெட்ட காதல்.
ஜாதிஇல்லை காதலுக்கு; காதல் செய்த
சாதனைகள், சரித்திரங்கள் கோடி கோடி!

அந்தியிலே சந்தியிலே காதல்; காட்டில்
அடர்ந்துள்ள தோப்பினிலே காதல்;சோற்றுப்
பந்தியிலே உண்ணுகையில் காதல்; வண்டிப்
பாதையிலே படுகையிலே காதல்; வேட்டித்
தொந்தியிலே மறைந்திருந்து காதல்; தண்ணீர்த்
துறையிலே காத்திருந்து காதல்; கோவில்
நந்தியிலே நின்றிருந்து காதல் ;இன்று
நம்முடைய காதலுக்கோர் கணக்கே இல்லை!

கொஞ்சம்இல்லை காதல்இங்கே!
கனாவில் இங்கே

**எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, 4.1.1995 அன்று நடைபெற்ற கவியரங்கில் 'காதல்' என்ற தலைப்பின்கீழ் பாடிய கவியரங்கக் கவிதையிலிருந்து.**

குஷ்புவுடன் காணுகின்றான் காதல்; ரோஜா
கொஞ்சவில்லை என்றவர்மேல் கூஜாக் காதல்!
கூடாத காதல்களைக் காண்கின்றோம் நாம்.
தஞ்சாவூர் பொம்மையிடம் காதல் கொள்ளும்
தன்மையைப் போல் ஆண்கள் இங்கே மதிமயங்கி
பஞ்சாகி எங்கெங்கோ பறந்து சென்று
பரிதவித்துப் போகின்றார் காதலாலே!

படக்காதல் நிஜம் என்று நம்பு கின்றார்!
பலர்அதனால் வீணாகி வெம்பு கின்றார்.
படக் காதல் வாங்குகின்ற பணத்துக் காக
பறந்தோடி ஆடுகின்ற பாட்டுக் காதல்!
மடக் காதல். வாழ்க்கையிலே மலராக் காதல்!
மதிப்புள்ள காதல்நம் சங்க நூலில்
இடம்பெற்ற காதல் என்பேன். இனி நான் அந்த
இலக்கணத்துக் காதலினை எடுத்துரைப்பேன்.

கண்டவுடன் அரும்புவதே நமது சங்க
காலத்தின் காதலாகும். ஆணும் பெண்ணும்
கண்டவுடன் கண்கலந்து அவர்கள் உள்ளம்
காத்திருக்க நேரமின்றிக் கலக்கு மானால்
பண்புஎந்தத் துறவுமின்றிப் பாயுமானால்
பணங்காசு பார்க்காமல் விரும்பு மானால்
உண்டங்கே காதல்என்பேன்! இயற்கை யான
உறவுக்குப் பெயரேதான் காதல் என்பேன்!

காரணத்தால் மலர்வதென்று காதல். நெஞ்சக்
காந்தத்தால் அதுமலரும். முத்து வைரத்
தோரணத்தால், தங்கத்தால் தாலி யாலே
துளிர்க்கின்ற கால்காசுக் காத லாகும்.
யாரென்று தெரியா ஓர் பெண்ணும் ஆணும்
செம்மண்ணில் பெய்தமழை நீர்போல் ஒன்று
சேர்வதுதான் காதலாகும். குறுந்தொகை நூல்
செப்புகின்ற செய்தி இது அறிந்து கொள்வீர்!

குலம்வகுத்துத் தமிழகத்தைக் கெடுத்தோர் உண்டு.
கொள்கைகளை வகுத்தவர்கள் தமிழர்கள், ஐந்து
நிலம்வகுத்து, அதற்குநெறி வகுத்து, நிலம்
தோறும் காதல் முறை வகுத்து நல்ல
வளம் வகுத்துத் தந்தார்கள் வையம் உய்ய,
வகுத்தவற்றில் நம்பிக்கை வளர்த்திட் டார்கள்.
நிலவகுப்பில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை,
நெய்தல் என்று நேர்த்தியுடன் பெயர்வைத் தார்கள்.

கூடுவது குறிஞ்சியாகும். காத லர்கள்
கொஞ்சுவதும் குறிஞ்சியாகும். பிரிந்து நின்று
வாடுவது பாலையாகும். வரும் வரைக்கும்
வருந்துவது முல்லை யாகும். ஆற்றா மையால்
தேடுவது இரங்கல் என்னும் நெய்தல் ஆகும்.
பிரிந்துவரும் தலைவனிடம் தலைவி வீட்டில்
ஊடுவது மருதமாகும். இவை அனைத்தும்
உணர்த்துவது தமிழர்களின் காதலாகும்.
தலைவன் என்னும் சொல்இந்த நாளில் நாட்டின்
தலைவரையே குறிப்பதாகும். இலக்கி யத்தில்
தலைவன் என்றும் தலைவி என்றும் காதல் செய்தோர்
தமையேநாம் கூறுவது வழக்க மாகும்.
தலைவன் தலைவிஎன்று காதல் தன்னை
தாங்கும் இந்த அமைப்புமுறை உலகில் எந்த
இலக்கியத்திலும் காணாப் புதுமை யாகும்!

## வனம்

இந்தியாவின் வனப்பகுதி 7.5 கோடி எக்டேர் ஆகும். இது மொத்த நிலப்பரப்பில் 22 சதவிகிதம். இங்கு 45,000 வகையான தாவரங்கள் காணக் கிடைக்கின்றன. இவற்றுள் 5,000 வகைகள் இந்தியாவிற்கே உரித்தானவை. நமது காடுகளில் 81,000 உயிரினங்கள் உள்ளன. இவற்றுள் பறவை வகைகளின் எண்ணிக்கை மட்டுமே 1,228 ஆகும். 57,525 வகையான பூச்சிகள் காணக் கிடைக்கின்றன.

தற்போது இந்தியாவில் 75 தேசியப் பூங்காக்களும், 421 வன விலங்குச் சரணாலயங்களும், புலிகளைக் காப்பதற்கான சிறப்புத் திட்டப் பகுதிகள் 21-ம், உயிரின வளத்தைப் பாதுகாப்பதற்கான 8 சிறப்புப் பகுதிகளும் உள்ளன. இவற்றின் மொத்தப் பரப்பளவு இந்திய நிலப்பகுதியில் 4.3 சதவிகிதம் ஆகும்.

# அறிவியல் வளர்ப்போம்!

**கவிஞர் வி.மு. உலகநாதன்**

இன்று நமக்குத் தேவை எது? - அதை
எண்ணிச் செய்தல் நலமாகும்.
என்றும் வாழ்வில் முன்னேற - அந்த
இனிதாம் அறிவியல் சிறப்பாகும்!
(இன்று)

ஆக்கம் நல்கும் அறிவியலே - நம்மை
அழகாய் வாழ வகைசெய்யும்.
ஊக்கம் கொண்டே நாமெல்லாம் - நாளும்
உழைப்போம் புதுமை நலங்காண்போம்!
(இன்று)

அழிவே செய்யும் பொருள்களையே - காணும்
அறிவியல் மனத்தைச் செலுத்தாமல்,
பழியே இல்லாப் புதுமைகளைக் - கண்டு
படைத்தல் அறிவியல் நெறியாகும்!
(இன்று)


பற்றாக் குறையைப் போக்குவதற்கு - அறிவுப்
பண்பைப் போற்றல் கடனாகும்.
பற்றால் நாட்டின் நலங்காக்க - இன்பப்
பயனாம் அறிவியல் வளர்த்திடுவோம்!
(இன்று)

## கல்வி

வரும் 2000-மாவது ஆண்டுக்குள் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்க இலக்கு உள்ளது. தற்போது இந்தியா கல்விக்கு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. நாட்டில் தற்போது 7.5 இலட்சம் ஆரம்ப மற்றும் உயர் தொடக்கப்பள்ளிகள் உள்ளன.

ஆறு வயது முதல் 14 வயதுக்கு உட்பட்ட 17 கோடி குழந்தைகள் உள்ளனர். இதில் 14.5 கோடி குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். 90 சதவிகித குழந்தைகளுக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே ஆரம்பப் பள்ளிகள் உள்ளன.

# கணிப்பொறி என்றால் என்ன?



'கணக்கிடும் செயல்களைச் செய்யக்கூடிய ஒரு பொறியே' கணிப்பொறி. கணிப்பொறியின் அடிப்படைச் செயல்களை மூன்றாகப் பிரித்துக் குறிப்பிடலாம்:

1. அது, எண்களைக் கூட்டுகிறது.

2. அது, விவரங்களைக் கணிப்பொறியின் ஒரு பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மாற்றித் தருகிறது.

3. அதன் செயல்களின் விளைவாக எளிமையான முடிவுகளை எடுக்கிறது.

இந்த மூன்று செயல்களைக் கூட கணிப்பொறியின் மிக மிக அடிப்படையான உறுப்புகள் வெறும் கூட்டல்களின் மூலமே செய்கின்றன. கணிப்பொறிக்கு உண்மையில் கூட்டுவதற்குத் தான் தெரியும். கூட்டலின் மூலமே அது கழித்தல், வகுத்தல், பெருக்கல் ஆகிய கணிதச் செயல்களைக்கூட செய்து தருகிறது. இதற்கான ஏற்பாடுகளைக் கணிப்பொறி இயந்திரத்தினைத் தயாரித்துத் தருபவர்களே செய்து விடுகிறார்கள் என்பதால், இது பற்றிக் கணிப்பொறியினைப் பயன்படுத்துபவர்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

கணிப்பொறியினை எத்தகைய வேலைகளுக்குப் பயன்படுத்தலாம்? மனிதனின் அடிப்படை கணக்கிடும் செயல் 'எண்ணுதல்' அல்லது 'கூட்டுதலே' என்பதால் மனிதன் செய்யக்கூடிய, பெரும்பாலான வேலைகளைக் கணிப்பொறி மூலம் செய்யலாம். மனிதன் தன்னுடைய அறிவினைப் பயன்படுத்தி செய்யக்கூடிய வேலைகள் யாவையும் கணிப்பொறி செய்யும் திறன்படைத்தது.

கணிப்பொறியானது கணக்கிடும் செயலை மட்டுமே செய்யக்கூடியதாக இருந்தால் அதற்கு இவ்வளவு பெருமைகள் கிடைத்திருக்காது. கட்டளையிடக்கூடியதாக இருப்பதே இதன் சிறப்புக்குக் காரணமாகும்.

**கட்டளையிடக்கூடியது என்றால் என்ன?**

கணிப்பொறியிடம் பல சொற்களால் அடங்கிய ஆணைகளின்படி அதற்குக் கொடுக்கப்படுகின்ற எவ்வளவு தகவல்களையும் அது தானியங்கியாகச் செயல்பட்டு நாம் கேட்கிற விடைகளைத் தரக்கூடியதாக உள்ளது. தானியங்கியாகச் சொன்னபடி கேட்டுச் செய்யக்கூடிய தன்மையும், மிகவும் விரைவான செயல்முறையும் அதற்கு அளவற்ற சக்தியினையும், வல்லமையையும் தருகின்றது.

எல்லாக் கணிப்பொறிகளுக்கும் உள்ளீடு (Input) மையச் செயலகம் (Central Processing Unit) வெளியீடு (Output) ஆகிய மூன்று செயல்களுக்கான அலகுகள் உள்ளன.

'உள்ளீடு' என்பது கணிப்பொறியினுள் நாம் செலுத்த வேண்டிய தகவல்கள், கட்டளை ஆகியவற்றை உள்ளே வாங்கிக் கொள்கின்ற கணிப்பொறியின் உறுப்பாகும். மையச் செயலகத்தினுள் 'நினைவகம்' (Memory Unit) கணித அளவை அலகு (Arithmetic Logic Unit) கட்டுப்பாட்டு அலகு (Control Unit) ஆகிய மூன்று பெரும் பிரிவுகள் உண்டு.

நினைவகம் கணிப்பொறியினுள் செலுத்தப்பட்ட விவரங்களையும், ஆணைகளையும் சிறப்புக் குறியீடுகளின் மூலம் தன்னுடைய இடத்தில் இருப்பு வைத்துக் கொள்கிறது. கணித அளவை, அலகு கணிப்பொறியில் செலுத்தப்பட்ட விவரங்களைக் கூட்டல், கழித்தல், போன்ற கணக்கீடுகளைச் செய்தும், பெறப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு முடிவுகளை எடுத்தும் செயலாற்றுகிறது.

கட்டுப்பாட்டு அலகானது மையச் செயலகம் சரியான முறையில் பணிகளைச் செய்கிறதா என்று கண்காணித்துச் செயல்படுத்தி வைக்கின்றது.

வெளியீடு என்பது, நாம் வேண்டுகின்ற விடைகளை நமக்குத் தருகின்ற உறுப்பாகும். மையச் செயலகமே கணிப்பொறியில் 'மூளை'யாகச் செயல்படுகின்றது.

**நன்றி: 'கணிப்பொறியின் பயன்கள்' திரு. இராம்குமார்.**

# தமிழ் வளர்ச்சி: "பற்றாளர்களே பகையாகக் கூடாது!"




## —டாக்டர் வ.செ. குழந்தைசாமி

**20**-வது நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருக்கும் நாம், இன்றைய நிலையையும் ஆய்ந்து பார்ப்போமேயானால் ஒரு விந்தையான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பழைய காலத்தில் ஒரு நாட்டில் ஏழைகள் இருந்தார்கள்; செல்வந்தர்கள் இருந்தார்கள். ஆனால் இன்றைய உலகில் செல்வந்த நாடுகள், முன்னேறிய நாடுகள் என்று ஒரு பகுதி- ஏழை நாடுகள் என்று ஒரு பகுதி!

உலகிலே இரு வகையாக, இரு வகையான நாடுகளாகப் பிரிந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை என்றும் இருந்ததில்லை. ஒரு புறம் ஏழை நாடுகள்; இன்னொரு புறம் செல்வந்தர்கள் நாடுகள்.

இந்த முன்னேறிய செல்வம் படைத்த நாடுகளில் இருக்கும் மக்களின் தொகை 23 சதவிகிதம்; இந்த ஏழை நாடுகள் அல்லது முன்னேறிக் கொண்டு இருக்கும் நாடுகள் என்று கூறுகிறோமே? அங்கு இருக்கும் மக்கள் தொகை 77 சதவிகிதம். முன்னேறியுள்ள நாடுகளில் இருக்கும் அந்த 23 சதவிகித மக்கள் உலக வளத்தின் 80 சதவிகிதத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

இந்த உலகில் எந்த நாளிலும் இல்லாதிருந்த ஒரு நிலையை நாம் 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாவதற்குக் காரணம் என்னவென்றால், இந்த முன்னேறிய நாடுகளின் நிலப்பரப்பு அல்ல; முன்னேறிய நாடுகளின் இயற்கை வளங்கள் அல்ல; முன்னேறிய நாடுகளின் மக்கள் தொகை அல்ல; அவர்கள் பேசும்மொழி அல்ல; அவர்கள் பின்பற்றும் மதம்கூட அல்ல.

மூன்றே மூன்று அடிப்படைக் காரணங்களினால் இன்று முன்னேறிய நாடுகளின் 23 சதவிகித மக்கள், உலகின் 80 சதவிகித வளங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று காரணங்களில் ஒன்று— அறிவுத் துறைகளில் அவர்கள் அடைந்திருக்கும் உச்ச நிலை. அதுவும் அறிவியல் தொழில்துறையில் அவர்கள் அடைந்திருக்கும் உச்ச நிலை.

இரண்டாவதாக – அறிவியல் தொழில்நுட்பத்தில் புதியனவற்றைப் படைக்கும் ஆற்றல்.

மூன்றாவதாக— இப்படி புதியன வாகப் படைத்தவற்றை அந்தப் பொதுமக்கள் பொருளாதார வளர்ச்சிக்காக, சமுதாய வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு திறமை!

இந்த மூன்றும் இவ்வளவு முக்கியத்துவம் பெற்று இருக்கும் போது, நமது நிலைமை என்ன?

இன்று ஓரளவுக்கு அறிவுத் துறையில் புதியனவற்றைப் புனையக்கூடிய ஆராய்ச்சிக் கூடங்கள் இருக்கின்றன. ஆனால் கற்றவற்றை, ஆராய்ச்சிக் கூடங்களில் புனைந்து, புதியனவற்றைப் பொதுமக்கள் அளவில் பரந்த அளவில் மாநிலத்தில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய திறன் பெற்ற மக்களை நாம் இன்று உருவாக்கவில்லை.

இன்று இருக்கும் நிலை எப்படி என்றால், ஒரு அணைக் கட்டு கட்டி ஏராளமான தண்ணீரைத் தேக்கி வைத்திருக் கிறோம். அதற்குப் பெரிய முதலீட்டையும் செய்திருக்கிறோம். ஆனால் அதுமட்டும் மக்களுக் குப் பயன்படுவதில்லை. அங் கிருந்து பெரிய கால்வாய் வேண்டும். பின்னர் சிறிய கால் வாய் வேண்டும். அதுவும் போதாது. அதைப் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு நிலம் பண்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்தக்கூடிய திறன் வாய்ந்த வேளாண்மையாளர் களும் இருக்கவேண்டும்.

இன்று நமது நிலை என்ன வென்றால், தேக்கப்பட்ட அணை யிலே தண்ணீர் இருக்கிறது. அதுபோன்று ஆய்வு நிறைகள் இருக்கின்றன. அதைப் பயன் படுத்தக்கூடிய திறமையுடைய மக்களை நாம் உருவாக்க வில்லை.

நான் ஒரு சான்று கூற விரும்புகிறேன். 1960–லிருந்து 1985 வரை, உலக வளம் இரண்டு மடங்காகி இருக்கிறது. இப்படி இரண்டு மடங்காக இருக்கும் இந்த உலக வளம் எல்லோ ருக்கும் சேர்ந்து இருக்கிறதா என்றால் 100க்கு 90 பேர் படித்த நாடுகளுக்கு மட்டும் இந்த உலக வளம் போய்ச் சேர்ந்திருக்கிறது. ஓரளவு 100க்கு 50 பேருக்குமேல் படித்தவர்களுக்கு ஒரு சிறிய பங்கு போய்ச்சேர்ந்தது. 50 பேருக்கும் கீழான படித்தவர்கள் உள்ள நாட்டுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை.

50 பேருக்குக் கீழான படித்தவர்களுடைய நாட்டுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட வில்லை. எனவே, இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச் சியின் பயனைத் தமிழ் மக்கள் பெறவேண்டுமானால், தமிழ் நிலம் வளம்பெறவேண்டுமானால் பண்டைக்காலம் தொட்டுப் பேசப்பட்டுவரும் பசிப்பிணி இந்த நாட்டிலிருந்து அகல வேண்டுமானால், அறிவியல் அறிஞர்களுடைய கல்வி மட்டும் போதாது; அவர்களுடைய கண்டுபிடிப்பு மட்டும் போதாது; இவற்றைப் பயன்படுத்தக்கூடிய பரந்த மக்கள் தொகையை நாம் உருவாக்கவேண்டும்.

எனவே, அந்த அடிப்படை யில் பார்க்கும்போது கல்லூரி அங்கத்திலோ அல்லது பல்கலைக்கழக அரங்கத்திலோ 'அறிவியலும், தமிழும்' என்று பேசுவது மட்டுமின்றி, இப்படிப் பட்ட பொதுமக்கள் அரங்கத் திலும் அது பேசப்பட வேண்டி யது தேவையாகிறது.

அதற்கு முக்கியமாக வேண்டியது, எல்லா மட்டத் திலும் அறிவியலைத் தமிழில் படித்திருக்கவேண்டும். எந்த வொரு அறிவுத்துறை தாய் மொழியில் இல்லையோ, அந்த அறிவுத்துறை சமுதாயத்திற்குச் சொந்தமானது அல்ல. நானோ, அல்லது மற்ற சிலரோ மட்டும் அறிவியல் கல்வித்துறையில் மேம்பட்டு இருப்பது எந்த விதத்திலும் மக்களுக்குப் பயன்படக்கூடிய ஒன்று அல்ல. அது தேக்கிவைக்கப்பட்ட நீர்-அணையில் இருக்கும் நீரைப் போன்றது. அது மக்கள் மன்றத் தில் சேரவேண்டுமானால் அந்த அறிவியல் துறை, தொழில் நுட்பத்துறை மக்கள் மொழியில் இருக்கவேண்டும்.

எது மக்கள் மொழியில் இல்லையோ, எது சமுதாயத்தின் மொழியில் இல்லையோ அது சமுதாயத்திற்குச் சொந்த மானதாகாது. எனவேதான், இன்று நாம் பயிற்று மொழி பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம்; நீண்ட நாளாகப் பேசிக்கொண்டி ருக்கிறோம்.

இந்தப் பயிற்றுமொழி என்று வரும்போது நான் ஒரு குறளை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

'வினைவலியும் தன்வலியும்
மாற்றான் வலியும்
துணைவலியும் தூங்கிச்
செயல்.

அறிவியல் தொழில்நுட்பத் தைத் தமிழில் கொண்டுவர வேண்டுமானால் அதன் அளவு என்ன, பரிமாணம் என்ன என் பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று கணிப்பொறி போன்ற ஒரு துறையை எடுத்துக் கொண்டால் ஐந்தாண்டுகளுக்

**இறைவனை இரண்டு வழிகளில் அணுகமுடியும். ஒன்று இசையால் மற்றொன்று கடுமையான தவத்தால். மந்திரங்கள் ஓதுவது மட்டும் தவமாகாது. தவம், மனதை ஐக்கியப் படுத்துவதன்மூலம் கிடைக்கும். இசைக்கும் போதும் மனம் ஐக்கிய மாகத்தான் வேண்டும்!**

**–டாக்டர் எம்.ஜி.ஆர்.**

குள் அறிவுத்துறை இரட்டிப்பு ஆகிறது. மின்சாரம் போன்ற ஒரு தொழிலை எடுத்துக்கொண்டால் 10 ஆண்டுகளில் அந்தத் துறை அறிவு இரண்டு மடங்காகிறது. மற்ற 'மெக்கானிக்கல் எஞ்சினீயரிங்','இயற்பொறியியல்' போன்ற துறைகளை எடுத்துக் கொண்டால், 10லிருந்து 15 ஆண்டுகளுக்குள் அது இரட் டிப்பு ஆகியது. இந்த வேகத் தையும் நாம் தாக்குப் பிடிக்க வேண்டும். அதே சமயத்தில் இதுவரை வளர்ந்துள்ள அறி வியல் கலைகளையும் தமிழில் கொடுக்கவேண்டும். இதுதான் இன்றிருக்கும் வினையின் வலி. தன் வலி.

நமது வலிமை என்ன என் பதை நாம் எண்ணிப் பார்ப்போ மேயானால் ஒன்று சங்க காலத் திற்குப் பிறகு களப்பிரர் காலம் வந்தபோது, பாலி மொழியும், வட மொழியும் ஆட்சி மொழி களாக இருந்தன.

பல்லவர் காலத்திற்கு வந்தபோது வட மொழி ஆட்சிமொழியாக இருந்தது.

பிறகு, சோழர், பாண்டியர் இடைவெளி தாண்டி நாயக்கர் காலத்திற்கு வந்தபோது 'சான்ஸ் கிரிட்டைஸ்டு தெலுகு'- 'வட மொழி வயப்பட்ட தெலுங்கு' ஆட்சி மொழியாக இருந்தது.

மொகலாயர் காலத்தில் அரேபிய மொழியும், பார்சிய மொழியும் ஆட்சி மொழியாக இருந்தது.

அவர்களுக்குப் பின் வந்த ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தது.

**அறிவினாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்!**

**-அறிஞர் அண்ணா**

கிட்டத்தட்ட இந்த 2 ஆயிரம் ஆண்டுத் தமிழர் வரலாற்றில் 1,300 ஆண்டுகள் தமிழ் ஆட்சி மொழியாக இருந்து வளரக் கூடிய வாய்ப்பை இழந்து நின்றிருக்கிறது என்பதை முக் கியமாக நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கும் எந்த மொழிக்கும் இப்படிப்பட்ட ஒரு நிலை இருந்ததாக நமக்குத் தெரியவில்லை. இது ஒரு குறை பாடு!

இரண்டாவதாக, மனித வளர்ச்சியை நாம் இன்று மூன்று யுகங்களாகப் பிரிக்க முடியும். வேளாண்மை யுகம், தொழில் யுகம், உயர் தொழில்நுட்ப யுகம் ஆகியவையே அவை. வேளாண்மை யுகம் 18-வது நூற்றாண்டில் ஓரளவிற்கு முடிவுக்கு வந்து, அதன் இறுதி யில் தொழில் யுகம் உருவாகியது. 1950க்குப் பின்னர் 20-வது நூற்றாண்டின் இடைப்பகுதி யிலிருந்து உயர் தொழில்நுட்பம் உருவாகியது. 18-வது நூற்றாண் டில் இருந்து 1950 வரையுள்ள காலப்பகுதி மிகக் குறுகிய தானாலும் மனித சமுதாயத்தின் ஒரு முழு யுகம் அது என்று நாம் கொள்ளவேண்டும்.

அதற்குப் பிறகு இந்த 50 ஆண்டுகள் மூன்றாவது யுகத்தின் ஆரம்பப் பகுதி. இந்தப் பகுதியில் வளர்ந்த அறிவுத் துறைகள் அத்தனையும் தமிழ் வளரக் கூடிய வாய்ப்பை இழந்து விட்டது. எனவே, பழமையை நாம் ஈடுசெய்யவேண்டும். புதி தாக உருவாக்கப்பட்ட அறிவுத் துறையைத் தமிழில் கொண்டுவர வேண்டும். எனவே, நம்முன் ஒரு சாதாரண பணியன்று; ஒரு மகத்தான பணி இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்தாற்போல் மாற்றான் வலி. நமக்கு மாற்றான் என்று வேறுயாரும் வெளியிலிருந்து கிடையாது. நமக்குத் தமிழ் வளர்ச்சியைப் பற்றி பகை வர்கள் என்று இருப்பார் களானால் அதிலே மிகப் பெரிய பங்கு வகிக்கும் பகைவர்கள் நாமேதான்.

ஏனென்றால், தமிழால் முடியுமா? இப்படி ஒரு பெரிய விவாதம். எப்படியோ தமிழகத் தில் எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அதை வாதப் பொருளாக்குவது என்பது நமது பண்பாடாக வளர்ந்துவிட்டது. கிட்டத்தட்ட பட்டிமன்றம் என்பது இன்று நடக்கும் ஒன்று அல்ல. அது கிட்டத்தட்ட தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதியாகவே இருந்துவருகிறது.

ஹீப்ரோ மொழி என்பது பேச்சு மொழியாகக்கூட இருக்க வில்லை. இன்று இஸ்ரேல் இருக்கும் பகுதியில் ஆஸ்திரேலி யாவில் இருந்து யூதர்கள், ஜெர்மனியில் இருந்து யூதர்கள், அமெரிக்காவில் இருந்து யூதர்கள்- யாருக்கும் ஹீப்ரோ மொழி தெரியாது. அவர்கள் அந்தந்த நாட்டு மொழியைத்

**உடைமாறுவது முக்கியமல்ல: உள்ளம் மாறுவதும் உயர்ந்த கருத்துக்கள் உள்ளத்தில் பதிவதும்தான் மிக முக்கியம்.**

**அறிஞர் அண்ணா**

தான் பேசி வந்தார்கள்.

அதற்குப் பிறகு அவர்கள் இஸ்ரேல் என்று கூறப்படும் நாட்டுக்கு வந்து ஓரளவுக்கு வழக்கிழந்துபோய் ஆங்காங்கே கலோக்கிய மொழி என்ற அளவிலே பேசிக் கொண்டு இருந்த மொழியை இன்று ஒரு இலக்கிய மொழியாகி, பள்ளியிலிருந்து பி.எச்டி., பட்டம் வரை இன்று ஹீப்ரோ மொழியில் தான் இருக்கும் அளவுக்கு நமக்குப் பின்னர் அந்த நாட்டை ஏற்படுத்தியவர்கள் செய்திருக்க முடியுமானால் 2,500 ஆண்டு பாரம்பரியமுள்ள ஒரு மொழியில் முடியுமா என்ற கேள்வியை எழுப்புவது நமது பண்பாட்டில் இருக்கும் ஒரு அடிப்படைக் குறை என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இரண்டாவதாக, தமிழைப் பயிற்சி மொழியாக்குவதில் ஒரு முனைப்பட்ட நோக்கு, ஒரு முனைப்பட்ட முயற்சி தமிழகத்தில் இருப்பதாகத் தோன்றவில்லை.

எப்பொழுதுமே குறிப்பிட்ட ஒரு நோக்கத்தோடு உறுதியோடு ஒரு பணியில் நாம் ஈடுபடுவோமானால், நாம் அதில் வெற்றி பெறுவது உறுதி. நான் யாரையும் குறைசொல்ல விரும்பவில்லை.

ஆட்சி எதுவாக இருந்தாலும் சரி; மொழி என்று வரும்பொழுது தமிழர்களுக்கு ஒரு மொழிக்கொள்கை வேண்டும். அப்படிப்பட்ட கொள்கை ஒன்று இல்லாமல், அது ஏதோ கட்சிக் கொள்கையாக ஓர் உருவத்தை எடுத்துவந்திருக்கிறது.

இரண்டாவதாக- ஒரு கட்சியில் கூட ஒருவர் தமிழகத்தில் கல்வி அமைச்சராக இருந்தால் ஒரு அணுகுமுறை; இன்னொருவர் தமிழகக் கல்வி அமைச்சராக இருந்தால், அதே கட்சியில் கூட இன்னொரு அணுகுமுறை என்கிற ஒரு வரலாறு தமிழ் நாட்டில் இருந்திருப்பதை சற்று ஆழமாகப் பார்த்தோமானால் அறியலாம். அதற்குப் பிறகு ஆட்சியில் இருந்து அரசு நடத்துபவர்கள்- நடத்தும் பொறுப்பைக் கொண்டவர்கள், அமைச்சர்கள், 'பாலிசி'- கொள்கை வகுப்பவர்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்றுபவர்களிடத்தும் ஓரளவு அதில் ஆர்வம் இருந்தாலொழிய கொள்கை வகுப்பவர்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தாலும் கடைசியில் அது நடைபெற இயலாது.

ஒரு சிறு சான்று கூற விரும்புகிறேன். இது சுய புராணம் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது.

1974-வது ஆண்டில் நான் தொழில்நுட்பக் கல்வியின் இயக்குநராகப் பொறுப்பேற்ற போது- மாண்புமிகு நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தார்கள். தமிழகத்தில் கல்விச் செயலராகத் திரு திரவியம் அவர்கள் இருந்தார்கள். நான் அவர்களிடத்தில் சொன்னேன்- டிகிரி அல்லது பட்டப்படிப்பு வகுப்பில் முதலில் தமிழ் கொண்டு வருவதைவிட பாலிடெக்னிக்- அந்த தொழிற் பயிற்சி கல்வி நிலையிலே நாம் தமிழைக் கொண்டுவருவது தொடக்கமாக அங்கும் எல்லா பாலிடெக்னிக்குகளிலும் கொண்டு வரக்கூடாது. சிலவற்றைத் தேர்ந்தெடுத்து- அங்கு ஆறு பாடம் இருக்குமானால் அதில் இரண்டு பாடத்தில் சொல்லிக் கொடுப்போம். ஏனென்றால் நாம் இருமொழிக் கொள்கையாளர்கள். இரு மொழிக் கொள்கை என்று வரும்பொழுது எந்த ஒரு துறையானாலும் தமிழில் பேசவேண்டிய நேரத்திலே அந்தத் துறைபற்றித் தமிழில் பேசமுடிய வேண்டும். அல்லது ஆங்கிலத்தில் பேச வேண்டிய நேரத்தில் அந்தத் துறை பற்றி ஆங்கிலத்தில் பேசவேண்டும்.

இன்று இரு மொழி என்று சொன்னால் என்னைப் பொறுத்தவரையில் உங்களைப் போன்றவர்களோடு பேசும் போது இருமொழி, அவை பொறியியல் கல்லூரிகளில் என்று வரும்போது ஒரு மொழியில் இருந்துகொண்டிருக்கிறோம். அங்கு இரு மொழி இன்றுவரை வரவில்லை. எனவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னபோது அமைச்சர் அவர்கள் உடனே ஒத்துக்கொண்டார்கள். கல்விச் செயலரும் ஊக்கம் அளித்தார்கள்.

நான் பொறுப்பேற்றது மார்ச் மாதம். ஜூன் மாதத்தில் அது

நடைபெறவேண்டும் என்று முடிவு செய்து அப்போது பி.ஏ., பி.எஸ்ஸி., மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களைக் கொடுத்தார்கள். அதே சலு கையை இவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று பேசி அந்தச் சலுகை அவர்களுக்கு வழங்கப் பட்டது. பிறகு இந்தத் திட்டம் எழுத்து வடிவில் அரசாங் கத்தின் ஆதரவு அனுமதிக்குப் போகிற போது கல்வித்துறையில் அனுமதிக்கப்பட்டு நிதித்துறைக்கு அனுமதி கோரியபோது, அதற்கு நிதித்துறையினர் எங்களிடம் முன்னதாகவே அனுமதி பெற வில்லை என்று உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். நான் எவ்வளவோ வாதாடியும் பார்த் தேன்.

,மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவையில் பேசும் போது- பேரவையில் நிதிநிலை அறிக்கையில் பேசும்போது, நாங்கள் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்குத் தொழிற் கல்வித்துறையில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்க இருக்கிறோம் என்று பேசி னார்கள். அதையும் எடுத்துக் கொண்டு காட்டினாலும் இது முக்கியம் இல்லை. எங்களுடைய அனுமதி இல்லாது செயற் படுத்தப்பட்ட ஒன்றினுக்கு இப்போது ஆதரவு தருவது என்பது இயலாது என்று கூறி விட்டார்களாம்.

எதற்காகக் கூறுகிறேன் என்றால், அரசியல் மட்டத்தில் மட்டும் அன்று, அரசியல் கொள் கைகளை வகுப்பவர்களில் யார் யார் அதிகம் அதைப் பயன் படுத்துகிறார்களோ அந்த அளவிலும் அதில் ஒரு ஈடுபாடு இல்லாதிருந்தாலொழிய இப்படிப் பட்ட ஒரு மாபெரும் திட்டத்தை நாம் செயல்படுத்தமுடியாது என்பதற்காகத்தான் நான் இதைக் கூற விரும்புகிறேன்.

எனவே, ஆட்சியாளர்களுக்கு இந்த ஈடுபாடு இருக்கவேண்டும். அந்தக் கொள்கையை நிறைவேற்றும் அதிகாரிகள் மட்டத்தில் இந்த ஈடுபாடு இருக்க வேண்டும். பொதுமக்களைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய ஒரு திறமையும் நமக்கு இருக்க வேண்டும்.

அடுத்தாற்போல், பயிற்சி மொழியைப் பற்றி ஒரு சில திட்டங்கள். பள்ளி நிலையில் பொதுக் கல்வி என்பது 12-வது வரை உள்ள பள்ளி நிலை. அந்த நிலை வரை நாம் தமிழைப் பயிற்று மொழியாக்கிட அறிவியல் தொழில்நுட்பம் அங்கும் இருக் கிறது. அந்த அளவுக்குப் பயின்று செல்லுகிறவர்கள் அனை வருக்கும் நாம் தமிழைப் பயிற்று மொழியாக்குவோமானால் பெரும்பாலும் இவர்கள்தான் மீண்டும் கிராமத்திற்குச் சென்று பணிபுரிபவர்கள். இது முதல் திட்டம்.

இரண்டாவது கட்டமாக வரும்போது பி.ஈ., பி.டெக்., என்பதைத் தமிழ்ப்படுவதை விட, டிப்ளமோவை ஒத்த மற்ற வகுப்புகளில் தமிழ் பயிற்று மொழியாக இடம்பெற வேண்டும்.

மூன்றாவதாகப் பெரும் பாலும் மக்களுக்குள்ளேயே பணிபுரிகிறவர்கள் மருத்து வர்கள்.

அதை அடுத்து, மாநிலத்திற் குள்ளேயே பணிபுரிபவர்கள் வேளாண்மைத் துறையினர்.

பின்னர், பொறியியல் துறை. கிட்டத்தட்ட அவர்கள் நாடு முழுவதும், உலகம் எங்கும் பணிபுரிபவர்கள்.

இப்படி கட்டம் கட்டமாக நாம் ஒரு 'டைம் டேபிள்' என்பதை வகுத்து, அதைப் பயிற்று மொழியைக் கொண்டு வருவது என்ற ஒரு முறையை ஏற்படுத்தினால் ஒழிய நாம் பயிற்று மொழித் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற முடி யாது என்பது எனது தாழ்மை யான கருத்து. பயிற்று மொழிக்கு நூல்கள் இல்லை. அதற்குத் தேவையான இலக்கியங்கள் உருவாக்கப்படவில்லை என்பது இன்னொரு கருத்து. இது சற்று ரேடிக்கல் என்று சொல்லு வோமே அப்படித் தோன்றலாம்.

கிட்டத்தட்ட ஒரு மொழியைப் பயிற்று மொழியாகப் பயன் படுத்துவது என்று முடிவுசெய்து தொடங்கிவிட்டால், பெரும் பாலும் இந்த நூல்களை உரு வாக்குவது அவ்வளவு பெரிய காரியமாக இருக்காது. ஆனால், மொழித்துறையில் நமது மொழி அறிஞர்கள் ஒருசில நெளிவு சுளிவுகளுக்குத் தங்களைச் சமமாக்கிக் கொள்ளவேண்டும். 21-வது நூற்றாண்டுக்குச்

**உலகுக்குப் பயன்படும் பாதி மனித சக்தியை நாம் பெண்ணடிமை மூலம் விரயப்படுத்திக் கொண்டிருக்கிறோம்!**

**-தந்தை பெரியார்**

சென்று கொண்டிருக்கும் நாம், கிட்டத்தட்ட நான் கூறியது போல் சங்க காலத்திற்குப் பின்னர் அறிவுத் துறைகளில் பெரும்பான்மையாக வளர்ச்சி பெற இயலாத ஒரு சூழ்நிலையில் தவித்துக்கொண்டிருக்கும் ஒரு மொழியை இப்படிப்பட்ட ஒரு தேவைக்கு மாற்றவேண்டுமானால் ஒரு சில புரட்சிகரமான மாற்றங்களை நமது தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள் ஒத்துக்கொள்ள மறுப்பார்களேயானால் அவர்களே தடைக் கற்களாகிவிடுகிறார்கள்.

சில சமயத்திலே ஒரு மொழியின் வளர்ச்சி பகைவர்களாலும் தடுக்கப்படுகிறது; இன்னும் சில சமயங்களில் பற்றாளர்களாலும் தடுக்கப்படுகிறது. இன்று தமிழைப் பொறுத்த வரை பகைவர்கள் யாரும் இல்லை. பற்றாளர்களே சில சமயங்களில் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறார்கள்.

புதிய சொற்களை உருவாக்குவதில் எத்தனையோ நெளிவு சுளிவுகளை இன்று மற்ற மொழிகள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. நான் ஒரு சில சான்று கூற விரும்புகிறேன்.

ஆங்கிலத்தில் (National) நேஷனல் என்ற சொல் இருக்கிறது. அதிலிருந்து Nationalised என்ற சொல் வந்தது. ஆனால் அவர்களே Private என்பதிலிருந்து Privatesis என்ற சொல்லை உருவாக்கவில்லை. To make Private என்றுதான் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஜெர்மன் மொழியில் அப்படி இல்லை.

> **இலக்கியமும் அரசியலும் ஒன்றை மற்றொன்று தழுவிச் செல்லுகிறபோதுதான் முறைப்படியான ஜனநாயகம் அமையும்!**
>
> **—அறிஞர் அண்ணா**

நேசுநேரல் என்பதிலிருந்து நேசுநேரலைசேரியன். அதே மாதிரி பிரிவாட் என்பதிலிருந்து பிரிவாட்சைரேரியன் என்ற சொல்லைப் பல நாட்களாக அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். அதைப் பார்த்து இன்று ஆங்கிலம் பேசும் மக்கள் பிரைவேட்டசைஸ் என்று எழுதுகிறார்கள்.

20 ஆண்டுகளுக்கு முன்பு இருக்கும் அகராதியைப் பார்த்தால் Nationaliseஎன்று இருக்கும். Privatesis என்று இருக்காது. இப்படி எத்தனையோ சொற்களை அவர்கள் ஓரளவு நெளிவு சுளிவுகளைப் பயன்படுத்தி உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழில் நாம் அப்படி சொற்களை உருவாக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும். நாம் அப்படி சொற்களை உருவாக்குவதற்கான உத்திகளை எங்களைப்போன்றவர்கள்படைப்பதை விட, தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இருக்கும் தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள் படைத்துக் கொடுக்கவேண்டும். இந்த வேலையை நாம் இரண்டாகப் பகுத்துக்கொள்ள வேண்டும். ஒன்று- அந்தத் துறையில் நூல்களை உருவாக்குவது, அந்தத் துறையைச் சேர்ந்தவர்களால்தான் செய்ய முடியும். ஆனால் அந்தத் துறையில் நூல்களை உருவாக்குவதற்குப் புதுச் சொற்களை உருவாக்கும் சில உத்திகளைப் படைப்பதற்குத் தமிழ்ப் புலவர்கள் துணைசெய்ய முடியும்.

இன்று நான் கேட்பதெல்லாம், தமிழ் வளர்ச்சி என்று வரும்போது கடந்த 25, 30 ஆண்டுக் காலமாக நமது தமிழ்ப் பல்கலைக் கழகங்கள், தமிழ் வளர்ச்சிக்கு எந்த அளவுக்குத் துணைபுரிந்திருக்கிறார்கள் என்பதை ஒரு ஆராய்ச்சியாக எடுத்துக்கொண்டு அது நமக்கு நிறைவாக இருந்தால் திருப்திப் படுவோம். அப்படி இல்லாவிட்டால் எதிர்காலத்தில் அவர்களால் என்ன செய்ய முடியும்? எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒரு காலத்தில் கல்வி என்பது கற்பிப்பது, ஆராய்ச்சி என்று மட்டும் இருந்தது. ஆனால் இன்று உலக அளவில், இந்தியா அளவில் கல்வி என்பது கற்பிப்பது, ஆராய்ச்சி மட்டும் அல்ல. கல்வி 'டெவலப் மண்ட்டல் ஆக்டிவிட்டி'- வளர்ச்சித் திட்டத்திற்கும் பயன்பட வேண்டும். எனவே, வளர்ச்சித் திட்டத்திற்கும் பயன்படவேண்டுமானால் இலக்கியத் துறையைச் சேர்ந்தவர்கள் அங்குமட்டும் இல்லாது பலவகையான அறிவுத் துறைகள் தமிழில் வருவதற்குச் சொற்களை எப்படி உருவாக்குவது என்பதில் ஒரு துணையாக நிற்க வேண்டும்.

ஒரு சான்று கூற விரும்புகிறேன். Budget என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். மிகச் சாதாரணமான சொல். எளிதாக எல்லோரும் பயன்படுத்திக் கொண்டிருப்பது. அதற்கு நாம் என்ன சொல்கிறோம்? நிதிநிலை

அறிக்கை என்கிறோம். அல்லது வரவுசெலவு அறிக்கை என்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் இன்று Water Resources Budget என்கிறார்கள். Energy Budget என்கிறார்கள், அந்த Budget என்ற சொல்லிலிருந்து Budget time என்ற ஒரு வினை உருவாகிறது; அதையே பயன் படுத்தி Budget Control என்ற ஒரு உரிச் சொல் உருவாகிறது. நாம் 'நிதிநிலை அறிக்கை' என்று வைத்துக்கொள்வோமேயானால், பட்ஜெட், பட்ஜெட்டரி கண்ட்ரோல், எனர்ஜி, வாட்டர் ரிசோர்சஸ் பட்ஜெட் என்பதற்கெல்லாம் அதிலிருந்து ஒரு புதிய சொல்லை உருவாக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிச் செய்யும்பொழுது, ஆங்கிலத்திலே ஒரு பாடத்தைப் படிப்பதைவிட, தமிழிலே படிப்பது கடினமாக ஆகிவிடுகிறது. இது தமிழின் குறை அல்ல. அந்தப் புதிய சொற்களை உருவாக்குவதற்கு வேண்டிய சில புதிய உத்திகளை நாம் படைக்கவில்லை என்பதைத்தான் நான் இங்கே கூற விரும்புகிறேன்.

இலங்கையில் 'பாதிடு' என்று ஒரு சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். நாம் இதை ஏற்றுக் கொள்வோமேயானால், அப்போது, நிதி பாதிடு, நீர்வளப் பாதிடு, சக்தி பாதிடு என்று- எனெர்ஜி பட்ஜெட், வாட்டர் ரீசோர்சஸ் பட்ஜெட் அண்டு பைனான்சியல் பட்ஜெட் என்பதை மொழி பெயர்ப்பது எளிதாகிவிடுகிறது. அதே போல பட்ஜெட்டரி, பட்ஜெட்டிங், என்னும்போது, பாதிடு செய்தல், பட்ஜெட்டரி கண்ட்ரோல் என்கிற போது பாதீட்டு ரெகுலேஷன் என்று சொல்வது எளிதாகிவிடுகிறது.



☆ **அறிவானது, மனிதனுடைய வாழ்வின் அஸ்திவாரமாகும். எனவே, மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் சக்தியை நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக்கொள்ள வேண்டும்.**

☆ **தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல, பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.**

எனவே, செய்ய இயலாது என்பதல்ல. ஆனால் அதற்கான சிந்தனையை நாம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆங்கிலத்தில் இன்னும் கூறவேண்டுமென்றால் Atom என்ற ஒரு சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள். அந்த ஒரு சொல்லிலிருந்து ஆட்டமைஸ், அணுக்கள் ஆற்றுவது. 'ஆட்டமைசர்', அணுக்கள் ஆற்றுவதற்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு கருவி. கிரேக்க காலத்திலிருந்து அணுவை அடிப்படையாக வைத்து ஒரு தத்துவம் இருந்தது. எனவே, அதை ஆட்டம் என்பதிலிருந்து ஆட்டோமிசம் என்ற ஒரு தத்துவத்தை உருவாக்கினார்கள். அதை நம்புகிறவர்களுக்குஆட்டமிஸ்டிக், ஆட்டமிஸ்டிஸ் என்ற ஒரு சொல்லை உருவாக்கினார்கள்.

எனவே தமிழில் புதிய புதிய சொற்களை உருவாக்குவதற்கு நாம் சில உத்திகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் அப்படி ஏராளமான உத்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையும் நாம் ஓரளவுக்கு எண்ணிப்பார்த்துச் செய்வ்து மிகவும் முக்கியம் என்று கருதுகிறேன்.


சில புதிய முயற்சிகளைப் புதிய உத்திகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு மனப் பான்மையை அறிஞர்கள் பெற வேண்டும். அதை மக்களிடத்திலே பரவவிட வேண்டுமென்பதற்காகச் சில வசதிகளை அரசு உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.


***—தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் ஆற்றிய உரை.***

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செல்வாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்

# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்








## சிறப்பு அம்சங்கள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

DIRP/DIS/95

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



